முழுப்பதிப்புரிமையுடையது

அந்தரங்கமானது

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2022(2023)

01- பௌதிகவியல்

புள்ளியிடும் திட்டம்



Figure (1)

இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது.

கல்விப் பொது தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை - 2022 (2023)

01 - பௌதிகவியல்

புள்ளி வழங்கும் திட்டம்

பத்திரம் I $1 \times 50 = 50$ புள்ளிகள்

பத்திரம் II

பகுதி A - ஒவ்வொரு வினாவிற்கும் 20 புள்ளிகள் - $20 \times 4 = 80$ புள்ளிகள்

பகுதி B - ஒவ்வொரு வினாவிற்கும் 30 புள்ளிகள் - $30 \times 4 = 120$ புள்ளிகள்

பகுதி II இற்குரிய மொத்தப் புள்ளி $80 + 120 = 200$ புள்ளிகள்

மொத்தப் புள்ளி :

பத்திரம் I = 50 புள்ளிகள்

பத்திரம் II $\left[\frac{200}{4}\right]$ = 50 புள்ளிகள்

இறுதிப் புள்ளி = $50 + \left[\frac{200}{4}\right]$

= 100 புள்ளிகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

உதாரணம் - வினா இல 03

(i) .....
.....
..... ✓ △ 4/5

(ii) .....
.....
..... ✓ △ 3/5

(iii) .....
.....
..... ✓ △ 3/5

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடப்பட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை ○ அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I ற்கான பல்தேர்வு வினாப்பத்திரத்தின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும். பத்திரம் II ற்கான மொத்த புள்ளிகளும் விபரப்புள்ளிகளும் புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும்.

❂ ❂ ❂

සියලුම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022(2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022(2023)

භෞතික විද්‍යාව I பௌதிகவியல் I Physics I	**01 T I**	පැය දෙකයි இரண்டு மணித்தியாலம் Two hours

அறிவுறுத்தல்கள் :

- ❊ இவ்வினாத்தாள் **11** பக்கங்களில் **50** வினாக்களைக் கொண்டுள்ளது.
- ❊ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ❊ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.
- ❊ விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசிக்க.
- ❊ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (×) இடுவதன் மூலம் காட்டுக.

கணிப்பானைப் பயன்படுத்தக்கூடாது.

$(g = 10\,m\,s^{-2})$

1. பின்வரும் கணியச் சோடிகளில் எந்தச் சோடியில் ஒரு காவியும் ஓர் எண்ணியும் முறையே இடம்பெறுகின்றன?
(1) திணிவு, வேகம் (2) வலு, கதி
(3) வேலை, தூரம் (4) விசை, அழுத்தச் சக்தி
(5) உந்தம், முறுக்கம்

2. ஒரு பொருளின் மீது தாக்கும் இரு ஒருதள விசைகளின் பருமன்கள் 11 N, 5 N ஆகும். பின்வரும் பெறுமானங்களில் எந்தப் பெறுமானம் விளையுள் விசையின் பருமனுக்குச் சமனாக இருக்கமாட்டாது?
(1) 16N (2) 9N (3) 7N (4) 6N (5) 5N

3. ஓர் இசைக் கருவியினால் உண்டாக்கப்படும் ஒலியின் பண்பு சார்ந்திருப்பது
(1) ஒலியின் மீடிறனை (2) ஒலியின் வீச்சத்தை
(3) ஒலியின் செறிவை (4) ஒலியின் அலைநீளத்தை
(5) ஒலியில் உள்ள மேற்றொனிகளின் இருப்பை

4. ஒரு நிலையான காந்தப் புலம் இடைத்தாக்கம் புரியாதது எந்த
(1) நிலையான மின்னேற்றங்களுடனும் ஆகும்.
(2) அசையும் மின்னேற்றங்களுடனும் ஆகும்.
(3) ஓட்டத்தைக் காவும் கம்பிகளுடனும் ஆகும்.
(4) நிலையான நிலைபேறான காந்தங்களுடனும் ஆகும்.
(5) அசையும் நிலைபேறான காந்தங்களுடனும் ஆகும்.

5. மின்மோட்டரில் உள்ள பின் மி.இ.வி உயர்ந்தபட்சமாக இருப்பது
(1) மோட்டர் தொழிற்படாதபோது
(2) மோட்டர் அதன் தொழிற்பாட்டை ஆரம்பிக்கும்போது
(3) மோட்டரின் கதி அதிகரிக்கும்போது
(4) மோட்டர் அதன் உயர்ந்தபட்சக் கதியில் இருக்கும்போது
(5) மோட்டரின் கதி குறையும்போது

6. உருவில் வரையப்பட்டுள்ள கதிர்களில் எந்தக் கதிர் சரியானதன்று?
(1) *A* (2) *B* (3) *C*
(4) *D* (5) *E*



7. $\bar{u}$ குவாக்கின் ($\bar{u}$ quark) ஏற்றம் யாது? (அடிப்படை ஏற்றம் e ஆகும்)

(1) 0 (2) $+\frac{1}{3}e$ (3) $+\frac{2}{3}e$ (4) $-\frac{2}{3}e$ (5) $-\frac{1}{3}e$

8. சூரியனின் மேற்பரப்பின் வெப்பநிலை 6000 K ஆகும். அது 500 nm உச்ச அலைநீளத்தில் கரும்பொருட் கதிர்ப்பைக் காலுகின்றது. மேற்பரப்பின் வெப்பநிலை 10 000 K ஆகவுள்ள ஒரு கரும்பொருளினால் காலப்படும் கதிர்ப்பின் உச்ச அலைநீளத்தின் பெறுமானம் யாது?

(1) 30 nm (2) 300 nm (3) 500 nm (4) 600 nm (5) 800 nm

9. புள்ளி A இலிருந்து எறியப்பட்ட ஒரு பந்தின் பாதை AB ஐ உரு காட்டுகின்றது. வளித் தடையைப் புறக்கணிக்க.



பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

(A) பாதையின் உயர்ந்தபட்ச உயரத்தில் பந்தின் வேகம் பூச்சியமாகும்.

(B) புள்ளி B இல் பந்தின் வேகம் புள்ளி A இல் உள்ள வேகத்திற்குச் சமம்.

(C) புள்ளி B இல் பந்தின் இயக்கப்பாட்டுச் சக்தி புள்ளி A இல் உள்ள இயக்கப்பாட்டுச் சக்திக்குச் சமம்.

மேற்குறித்த கூற்றுகளில்

(1) (A) மாத்திரம் உண்மையானது.
(2) (C) மாத்திரம் உண்மையானது.
(3) (B), (C) ஆகியன மாத்திரம் உண்மையானவை.
(4) (A), (C) ஆகியன மாத்திரம் உண்மையானவை.
(5) (A), (B), (C) ஆகிய எல்லாம் உண்மையானவை.

10. கம்பியின் திரவியத்தின் யங்கின் மட்டு

(A) கம்பியின் தொடக்க நீளத்தைச் சார்ந்திருக்கின்றது.

(B) கம்பியின் குறுக்குவெட்டுப் பரப்பளவைச் சார்ந்திருக்கின்றது.

(C) கம்பியின் திரவியத்தின் இயல்பைச் சார்ந்திருக்கின்றது.

மேற்குறித்த கூற்றுகளில்

(1) (A) மாத்திரம் உண்மையானது.
(2) (B) மாத்திரம் உண்மையானது.
(3) (C) மாத்திரம் உண்மையானது.
(4) (A), (C) ஆகியன மாத்திரம் உண்மையானவை.
(5) (A), (B), (C) ஆகிய எல்லாம் உண்மையானவை.

11. ஒரு சமாந்தர உலோகத் தகட்டுச் சோடிக்கிடையே 200 V m^{-1} செறிவு உள்ள ஒரு சீரான மின் புலம் பிரயோகிக்கப்படுகின்றது. ஒரு 10 V அழுத்த வித்தியாசத்தை உண்டாக்குவதற்குத் தகடுகளுக்கிடையிலான வேறாக்கம் யாதாக இருத்தல் வேண்டும்?

(1) 20 mm (2) 30 mm (3) 50 mm (4) 20 m (5) 30 m

12. நிற்பாட்டப்பட்டிருக்கும் ஒரு காரில் உள்ள எச்சரிக்கைச் சீழ்க்கை 510 Hz மீடிறன் உள்ள ஒலி அலைகளைக் காலுகின்றது. ஒரு மோட்டர்ச் சைக்கிளில் செல்லும் ஒருவர் காரிலிருந்து நேரடியாக அப்பாற் செல்கின்றார். அவர் எச்சரிக்கைச் சீழ்க்கையின் மீடிறனை 480 Hz இற் கேட்டால், அவருடைய வேகம் யாது? (வளியில் ஒலியின் கதி 340 m s^{-1} ஆகும்)

(1) 10 m s^{-1} (2) 15 m s^{-1} (3) 20 m s^{-1} (4) 25 m s^{-1} (5) 30 m s^{-1}

13. ஒரு துணிக்கையின் உந்தம் (p) ஆனது அதன் டி புறொக்லி (de Broglie) அலைநீளம் (λ) உடன் மாறலைப் பின்வரும் வரைபுகளில் எது மிகச் சிறந்த விதத்தில் வகைகுறிக்கின்றது?



14. ஒரு காரில் உள்ள கொழுப்புக் காம்பின் (grease nipple) விட்டம் 5×10^{-4} m உம் நீளம் 3×10^{-3} m உம் ஆகும். கொழுப்பின் பிசுக்குமைக் குணகம் 80 Pas எனின், 10 s இல் 10^{-6} m^3 கனவளவுள்ள கொழுப்பை இக்காம்பினூடாக வெளியேற்றுவதற்குத் தேவையான அழுக்க வித்தியாசம் யாது?
$[(2{\cdot}5)^4 = 40$ எனவும் $\pi = 3$ எனவும் எடுத்துக் கொள்க]

(1) $1{\cdot}6\times10^3$ Pa (2) $1{\cdot}6\times10^4$ Pa (3) $1{\cdot}6\times10^5$ Pa (4) $1{\cdot}6\times10^6$ Pa (5) $1{\cdot}6\times10^7$ Pa

15. தனிப் பூச்சிய வெப்பநிலை பற்றி ஆக்கப்பட்ட பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

(A) அது வளிமண்டல அழுக்கத்தில் நீர் உறையும் வெப்பநிலையாகும்.
(B) அது எல்லா வாயுக்களும் திரவங்களாக மாறும் வெப்பநிலையாகும்.
(C) அது ஓர் இலட்சிய வாயுவின் இடை இயக்கப்பாட்டுச் சக்தி பூச்சியமாகும் வெப்பநிலையாகும்.

மேற்குறித்த கூற்றுகளில்
(1) (A) மாத்திரம் உண்மையானது.
(2) (C) மாத்திரம் உண்மையானது.
(3) (A), (C) ஆகியன மாத்திரம் உண்மையானவை.
(4) (B), (C) ஆகியன மாத்திரம் உண்மையானவை.
(5) (A), (B), (C) ஆகிய எல்லாம் உண்மையானவை.

16. பின்வருவனவற்றில் எது தரவின் ஒரு பிற்றை (one bit) மாத்திரம் தேக்கி வைக்கும்?
(1) AND படலை (2) NOR படலை (3) XOR படலை (4) OR படலை (5) எழுவீழ்

17. l நீளமுள்ள ஓர் எளிய ஊசலின் அலைவுக் காலம் T ஆகும். ஓர் உயர்த்தியின் சீலிங்கிலிருந்து $2l$ நீளமுள்ள ஓர் எளிய ஊசல் தொங்கவிடப்பட்டுள்ளதெனக் கொள்க. உயர்த்தி நிலைக்குத்தாக மேல்நோக்கி $\frac{g}{2}$ இல் ஆர்முடுகுமெனின், இவ்வூசலின் அலைவுக் காலம் யாதாக இருக்கும்?

(1) $\frac{T}{4\sqrt{3}}$ (2) $\frac{T}{2\sqrt{3}}$ (3) $\frac{T}{\sqrt{3}}$ (4) $\frac{2T}{\sqrt{3}}$ (5) $\frac{4T}{\sqrt{3}}$

18. 2 kg திணிவுள்ள ஒரு பொருள் ஓர் உராய்வின்றிய கிடை மேற்பரப்பு மீது தொடக்கத்தில் ஓய்வில் உள்ளது. அடுத்ததாக நேரம் t உடன் மாறும் ஒரு கிடை விசை F ஆனது உருவிற் காட்டியவாறு 6 s முழுவதும் பொருளின் மீது தாக்குகின்றது. பொருளின் இறுதி வேகம் யாது?



(1) 20 m s^{-1} (2) 25 m s^{-1} (3) 30 m s^{-1}
(4) 40 m s^{-1} (5) 50 m s^{-1}

19. ஒரு நேர்கோடு வழியே இயங்கும் P, Q என்னும் இரு பொருள்களின் இடப்பெயர்ச்சி (s)-நேர (t) வரைபுகள் உருவில் காட்டப்பட்டுள்ளன. பின்வரும் கூற்றுகளைக் கருதுக.



(A) இரு பொருள்களினதும் வேகங்கள் ஒரே திசையில் உள்ளன.
(B) இரு பொருள்களினதும் வேகங்கள் நேரத்துடன் அதிகரிக்கின்றன.
(C) இவ்விரு வரைபுகளும் சந்தித்துச் செல்லும் புள்ளியில் இரு பொருள்களுக்கும் சம வேகங்கள் உண்டு.

மேற்குறித்த கூற்றுகளில்
(1) (A) மாத்திரம் உண்மையானது.
(2) (A), (B) ஆகியன மாத்திரம் உண்மையானவை.
(3) (A), (C) ஆகியன மாத்திரம் உண்மையானவை.
(4) (B), (C) ஆகியன மாத்திரம் உண்மையானவை.
(5) (A), (B), (C) ஆகிய எல்லாம் உண்மையானவை.

20. 1 kg திணிவுள்ள ஒரு குற்றி ஒரு கரடான கிடை மேற்பரப்பு மீது வைக்கப்பட்டுள்ளது. உருவிற் காட்டப்பட்டுள்ளவாறு கிடையுடன் 30° இற் சாய்ந்த ஒரு 4 N விசையினால் குற்றி இழுக்கப்படுகின்றது. குற்றி எல்லை நாப்பத்தில் இருக்குமெனின், இவ்விரு மேற்பரப்புகளுக்குமிடையே உள்ள எல்லை உராய்வுக் குணகத்தின் பெறுமானம் யாது?



(1) $\frac{\sqrt{3}}{4}$ (2) $\frac{\sqrt{3}}{5}$ (3) $\frac{\sqrt{3}}{6}$
(4) $\frac{\sqrt{3}}{8}$ (5) $\frac{\sqrt{3}}{10}$

21. சுனாமி அலைகள் பற்றி ஆக்கப்பட்ட பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

(A) ஆழங்கூடிய நீரில் உள்ள அலைகளின் அலைநீளங்கள் ஆழங்குறைந்த நீரில் உள்ள அலைகளின் அலைநீளங்களிலும் குறைந்தனவாகும்.

(B) ஆழங்கூடிய நீரில் உள்ள அலைகளின் கதிகள் ஆழங்குறைந்த நீரில் உள்ள அலைகளின் கதிகளிலும் கூடியனவாகும்.

(C) ஆழங்கூடிய நீரில் உள்ள அலைகளின் வீச்சங்கள் ஆழங்குறைந்த நீரில் உள்ள அலைகளின் வீச்சங்களிலும் கூடியனவாகும்.

மேற்குறித்த கூற்றுகளில்

(1) (A) மாத்திரம் உண்மையானது.
(2) (B) மாத்திரம் உண்மையானது.
(3) (A), (C) ஆகியன மாத்திரம் உண்மையானவை.
(4) (B), (C) ஆகியன மாத்திரம் உண்மையானவை.
(5) (A), (B), (C) ஆகிய எல்லாம் உண்மையானவை.

22. ஒரு சீரான சதுரத் தகடு $PQRS$ இலிருந்து ஒரு முக்கோணி வடிவமுள்ள பகுதி QBR ஐ அகற்றி உருவிற் காட்டப்பட்டுள்ளவாறு இணைப்பதன் மூலம் சேர்த்தித் தகடு $PQB'RS$ ஆக்கப்பட்டுள்ளது. சேர்த்தித் தகட்டின் புவியீர்ப்பு மையம் பெரும்பாலும் இருக்கத்தக்க புள்ளி



(1) A (2) B (3) C
(4) D (5) E

23. சமாந்தரமாகத் தொடுக்கப்பட்டுள்ள ஒரு 3·0 Ω தடையி, ஓர் 6·0 Ω தடையி ஆகியவற்றுடன் 6·0 V மி.இ.வி. உள்ள ஒரு பற்றரி தொடுக்கப்பட்டுள்ள ஒரு சுற்று உருவிற் காட்டப்பட்டுள்ளது. ஆளி K திறந்திருக்கும்போது இலட்சிய அம்பியர்மானியின் வாசிப்பு 1·5 A ஆகும். ஆளி K மூடப்பட்டிருக்கும்போது அம்பியர்மானி வாசிப்பு யாது?



(1) 1·0 A (2) 1·2 A (3) 1·5 A
(4) 2·0 A (5) 3·0 A

24. 20 m உயரமுள்ள ஒரு கட்டடத்தின் மேல் விளிம்பிலிருந்து ஒரு பந்து கிடையாக 10 m s^{-1} வேகத்தில் எறியப்படுகின்றது. விழும்போது பந்து X, Y என்னும் இரு சர்வசமப் பகுதிகளாகப் பிளக்கின்றது. பின்னர் X, Y ஆகிய இரு பகுதிகளும் உருவிற் காட்டப்பட்டுள்ளவாறு கட்டடத்திலிருந்து முறையே 10 m, R என்னும் கிடைத் தூரங்களில் தரையில் ஒரே வேளையிற் படுகின்றன. வளித் தடையைப் புறக்கணிக்க. தூரம் R யாது?



(1) 20 m (2) 30 m (3) 40 m
(4) 50 m (5) 60 m

25. ஒரு பந்து புள்ளி A இல் விடுவிக்கப்படும்போது ஓர் உராய்வின்றிய பாதை மீது உருவிற் காட்டப்பட்டுள்ளவாறு செல்கின்றது. பின்னர் பந்து R ஆரையுள்ள பாதையின் வட்டப் பகுதியின் உள் மேற்பரப்பு மீது உள்ள புள்ளி B ஐ மட்டுமட்டாகத் தொடுகின்றது.



புள்ளி B இல் பந்தின் வேகம் யாது?

(1) 0 (2) $\sqrt{gR}$ (3) $2\sqrt{gR}$
(4) $\sqrt{5gR}$ (5) $4\sqrt{gR}$

26. ஒரு வட்டத்தின் பரிதி வழியே வைக்கப்பட்டுள்ள பத்துச் சர்வசம இசைக் கருவிகள் வட்டத்தின் மையத்தில் ஓர் 50 dB ஒலிச் செறிவு மட்டத்தை உண்டாக்குகின்றன. மையத்தில் ஓர் 60 dB ஒலிச் செறிவு மட்டத்தை உண்டாக்குவதற்கு வட்டத்தின் பரிதி வழியே எத்தனை சர்வசம இசைக் கருவிகளை வைத்தல் வேண்டும்?

(1) 10 (2) 20 (3) 50 (4) 100 (5) 200

27. R ஆரையுள்ள ஓர் அரைக்கோளப் பாத்திரத்தின் விளிம்பிலிருந்து m திணிவுள்ள ஒரு கோளம் உருவிற் காட்டப்பட்டுள்ளவாறு விடுவிக்கப்படுகின்றது. கோளம் பல தடவைகள் அலைந்த பின்னர் உராய்வு காரணமாக இறுதியில் பாத்திரத்தின் அடியில் நிற்கின்றது.
இச்செயன்முறையின்போது கோளத்தின் மீது தாக்கும் ஈர்ப்பு விசையினாலும் செவ்வன் மறுதாக்க விசையினாலும் செய்யப்பட்ட வேலை பற்றிப் பின்வருவனவற்றில் எது உண்மையானது?

	ஈர்ப்பு விசையினாற் செய்யப்பட்ட வேலை	செவ்வன் மறுதாக்க விசையினாற் செய்யப்பட்ட வேலை
(1)	0	0
(2)	$\frac{1}{2}mgR$	0
(3)	mgR	0
(4)	0	mgR
(5)	mgR	mgR



28. ஒருவர் மெல்லிய கண்ணாடிச் சுவர்களைக் கொண்ட ஒரு கொள்கலத்தில் இருக்கும் ஒரு நீர்வாழ் தாவரத்தின் ஒளிப்படத்தை ஒரு குவிவு வில்லையைப் பயன்படுத்தி எடுக்கின்றார். கொள்கலத்தில் நீர் நிறைந்துள்ளது. ஒளிப்படப் படலம், வில்லை, நீர்வாழ் தாவரம் ஆகியன உருவிற் காட்டப்பட்டுள்ளவாறு தானப்படுத்தப்பட்டிருக்கும்போது நீர்வாழ் தாவரத்தின் ஒரு தெளிவான விம்பம் ஒளிப்படப் படலத்தின் மீது பதிவு செய்யப்படுகின்றது. (நீரின் முறிவுச் சுட்டி $= \frac{4}{3}$)



குவிவு வில்லையின் குவியத் தூரம் யாது?

(1) 8·0 cm (2) $\frac{25}{3}$ cm (3) $\frac{110}{13}$ cm (4) 9·0 cm (5) $\frac{40}{3}$ cm

29. உருவிற் காட்டப்பட்டுள்ளவாறு X, Y என்னும் இரு புள்ளியேற்றங்கள் ஒரு நேர்கோடு வழியே நிலைப்படுத்தப்பட்டுள்ளன. X இன் ஏற்றம் $+q$ ஆகும். ஒரு மறைப் புள்ளியேற்றம் புள்ளி P இல் வைக்கப்படும்போது அது நிலையாக இருக்கின்றது. Y இன் ஏற்றம் யாது? ஏற்றங்களின் மீது தாக்கும் ஏனைய எல்லா விசைகளையும் புறக்கணிக்க.



(1) $-\frac{1}{\sqrt{2}}q$ (2) $-\frac{1}{2}q$ (3) $+\frac{1}{2}q$

(4) $+\frac{1}{\sqrt{2}}q$ (5) $+2q$

30. புறக்கணிக்கத்தக்க அகத் தடை உள்ள இரு பற்றரிகள், ஐந்து தடையிகள், ஒரு கொள்ளளவி ஆகியவற்றைக் கொண்ட ஒரு சுற்று உருவிற் காட்டப்பட்டுள்ளது.

சுற்றின் உறுதி நிலை அடையப்பட்ட பின்னர் 3 Ω தடையியினூடாகப் பாயும் ஓட்டம் யாது?

(1) 0·1 A (2) 0·2 A (3) 0·4 A

(4) 0·8 A (5) 1·0 A



31. வெவ்வேறு குறுக்குவெட்டுகளைக் கொண்ட ஓர் ஓட்டத்தைக் காவும் உலோகக் கம்பி உருவிற் காட்டப்பட்டுள்ளது. பின்வரும் கூற்றுகளைக் கருதுக.



(A) ஓட்டம் கம்பியில் எல்லா இடங்களிலும் ஒரேயளவினதாகும்.
(B) கம்பியில் தடித்த பிரிவிலும் பார்க்க மெல்லிய பிரிவில் வலு விரயம் உயர்ந்ததாகும்.
(C) கம்பியில் தடித்த பிரிவிலும் பார்க்க மெல்லிய பிரிவில் இலத்திரன்களின் நகர்வு வேகம் உயர்ந்ததாகும்.

மேற்குறித்த கூற்றுகளில்

(1) (A) மாத்திரம் உண்மையானது.
(2) (B) மாத்திரம் உண்மையானது.
(3) (A), (C) ஆகியன மாத்திரம் உண்மையானவை.
(4) (B), (C) ஆகியன மாத்திரம் உண்மையானவை.
(5) (A), (B), (C) ஆகிய எல்லாம் உண்மையானவை.

32. உருவிற் காட்டப்பட்டுள்ளவாறு நான்கு உலோகத் தகடுகள் d இடைத் தூரங்களில் வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தகடும் மற்றைய தகடு மீது மேற்படியும் பரப்பளவு A ஆகும். தொகுதியின் சமவலுக் கொள்ளளவம் யாது?



(1) $\frac{1}{3}\frac{\varepsilon_0 A}{d}$ (2) $\frac{1}{2}\frac{\varepsilon_0 A}{d}$ (3) $\frac{\varepsilon_0 A}{d}$ (4) $2\frac{\varepsilon_0 A}{d}$ (5) $3\frac{\varepsilon_0 A}{d}$

33. உருவிற் காட்டப்பட்டுள்ளவாறு ஒரு கண்ணாடி அரியத்தின் முகம் AC மீது ஓர் ஒருநிற ஒளிக் கதிர் செவ்வனாகப் படுகின்றது. கண்ணாடியின் முறிவுச் சுட்டி $\frac{3}{2}$ ஆகும். அரியத்தின் முகம் AB மீது முறிவுச் சுட்டி n ஐ உடைய ஓர் ஊடுகாட்டும் திரவப் படை இடப்பட்டுள்ளது. கதிர் முகம் AB இலிருந்து முழு அகத் தெறிப்படைவதற்கு n தொடர்பாகப் பின்வருவனவற்றில் எது சரியானது?



(1) $n < \frac{3\sqrt{3}}{8}$ (2) $n < \frac{3}{4}$ (3) $n < \frac{3\sqrt{3}}{4}$

(4) $n > \frac{3\sqrt{3}}{8}$ (5) $n > \frac{3\sqrt{3}}{4}$

34. உருவில் ஒரு திரவம் நிரப்பப்பட்ட ஓர் இறையி (siphon) காட்டப்பட்டுள்ளது. உரிய உயரங்கள் உருவிற் குறிக்கப்பட்டுள்ளன. இறையியின் புள்ளி C இலிருந்து வெளிப்படும் திரவத்தின் கதி (v) யாது? குழாயின் குறுக்குவெட்டுப் பரப்பளவுடன் ஒப்பிடும்போது திரவக் கொள்கலத்தின் குறுக்குவெட்டுப் பரப்பளவு பெரியது எனவும் பாய்ச்சல் உறுதியானதும் பிசுக்கற்றதுமாகும் எனவும் கொள்க.



(1) $v = \sqrt{2g(h_1 + h_2 + h_3)}$

(2) $v = \sqrt{2g(h_1 + h_2)}$

(3) $v = \sqrt{2g(h_1 + h_3)}$

(4) $v = \sqrt{2g(h_2 + h_3)}$

(5) $v = \sqrt{2gh_3}$

35. M திணிவும் L நீளமும் உள்ள ஒரு சீரான கோல் AB ஆனது உருவிற் காட்டப்பட்டுள்ளவாறு முனை A இற் சுயாதீனமாகப் பிணையலிடப்பட்டு, முனை B உடன் இணைக்கப்பட்ட ஓர் இழையினால் கிடையாக வைக்கப்பட்டுள்ளது. இழை வெட்டப்பட்ட பின்னர் முனை B இன் தொடக்க நிலைக்குத்து ஏகபரிமாண ஆர்முடுகல் யாது? முனை A பற்றிக் கோலின் சடத்துவத் திருப்பம் $\frac{1}{3}ML^2$ ஆகும்.

(1) $\frac{2}{3}g$ (2) $\frac{3}{4}g$ (3) g

(4) $\frac{3}{2}g$ (5) $2g$



36. ஒரு பக்கத்தின் நீளம் 10 cm ஆகவுள்ள ஓர் ஏகவின மரச் சதுரமுகி உருவிற் காட்டப்பட்டுள்ளவாறு ஒரு விற்றராசுடன் இணைக்கப்பட்டுள்ள ஓர் இலேசான இழையினால் ஒரு நீர்த் தாங்கியினுள்ளே தொங்கவிடப்பட்டுள்ளது. மரத்தினதும் நீரினதும் அடர்த்திகள் முறையே $800\,kg\,m^{-3}$, $1000\,kg\,m^{-3}$ ஆகும். தராசின் வாசிப்பு 3 N எனின், நீரினுள் இருக்கும் மரத்தின் கனவளவு யாது?

(1) 400 cm^3 (2) 500 cm^3 (3) 600 cm^3

(4) 700 cm^3 (5) 800 cm^3



37. இரு முனைகளிலும் அடைத்தொட்டப்பட்ட ஒரு சீரான கண்ணாடிக் குழாய் AB இன் நீளம் 100 cm ஆகும். அது கிடையாக வைக்கப்பட்டிருக்கும் அதே வேளை இரு வளி நிரல்களும் (P உம் Q உம்) 27°C வெப்பநிலையிலும் ஒரே அமுக்கத்திலும் இருக்கும்போது 10 cm நீளமுள்ள ஓர் இரச (Hg) நிரல் குழாயின் நடுவில் சிறைப்படுத்தப்பட்டுள்ளது. P, Q ஆகிய வளி நிரல்களின் வெப்பநிலைகள் முறையே 47°C இற்கும் 127°C இற்கும் அதிகரிக்கப்படுமெனின், இரு வளி நிரல்களினதும் நீளங்களுக்கிடையே உள்ள வித்தியாசம் யாது? இரசத்தினதும் கண்ணாடியினதும் விரிவைப் புறக்கணிக்க.

(1) 5 cm (2) 6 cm (3) 8 cm

(4) 10 cm (5) 12 cm



38. A, B, C என்னும் மூன்று சர்வசமக் கடத்தும் கோளங்கள் காவல் ஆதாரங்களின் மீது ஏற்றப்பட்டு, உருவிற் காட்டப்பட்டுள்ளவாறு வேறாக்கி வைக்கப்பட்டுள்ளன. கோளம் A இற்கு ஒரு $+3q$ ஏற்றமும் கோளம் C இற்கு ஒரு $-2q$ ஏற்றமும் வழங்கப்படுகின்றன. கோளம் B இல் தேறிய ஏற்றம் எதுவும் இல்லை. அடுத்ததாகக் கோளம் B முதலில் கோளம் C ஐத் தொடச் செய்யப்பட்டு, இரண்டாவதாகக் கோளம் B ஆனது கோளம் A ஐத் தொடச் செய்யப்பட்டு, இறுதியாகக் கோளங்கள் தொடக்கத் தானங்களுக்குக் கொண்டு வரப்படுகின்றன. ஒவ்வொரு கோளத்திலும் எஞ்சியிருக்கும் இறுதி ஏற்றம்

	கோளம் A	கோளம் B	கோளம் C
(1)	$+3q$	$-q$	$-q$
(2)	$+2q$	0	$-q$
(3)	$+2q$	$-q$	0
(4)	$+q$	$-q$	$+q$
(5)	$+q$	$+q$	$-q$



39. பாய அடர்த்தி B ஐ உடைய ஒரு சீரான காந்தப் புலம் உருவிற் காட்டப்பட்டுள்ளவாறு தாளின் தளத்திற்குள்ளே வழிப்படுத்தப்பட்டுள்ளது. ஆரை r ஐ உடைய ஓர் அரைவட்டக் கடத்தும் தடம் தளத்திற்குச் செங்குத்தாக மையம் O பற்றி மாறாக் கோண வேகம் ω இற் சுழல்கின்றது. தடத்தின் தடை $2\,\Omega$ ஆகும். தடத்தில் தூண்டப்படும் ஓட்டத்தின் பருமன் யாது?

(1) $\frac{1}{4}\omega r^2 B$ (2) $\frac{1}{2}\omega r^2 B$ (3) $\omega r^2 B$

(4) $2\omega r^2 B$ (5) $4\omega r^2 B$



40. AB, BC, BD, CD, CE, DE என்னும் ஆறு சீரான உலோகக் கோல்கள் உருவிற் காட்டப்பட்டுள்ளவாறு இணைக்கப்பட்டுள்ளன. எல்லாக் கோல்களுக்கும் சர்வசம நீளமும் குறுக்குவெட்டுப் பரப்பளவும் உண்டு. AB, BC, BD ஆகிய கோல்கள் செய்யப்பட்டுள்ள திரவியத்தின் வெப்பக் கடத்தாறு k_1 உம் CD, CE, DE ஆகிய கோல்கள் செய்யப்பட்டுள்ள திரவியத்தின் வெப்பக் கடத்தாறு k_2 உம் ஆகும்.

எல்லாக் கோல்களும் நன்றாகக் காவற்கட்டிடப்பட்டு, A, E ஆகிய முனைகள் முறையே $\theta_1, \theta_2 (\theta_1 > \theta_2)$ வெப்பநிலைகளில் பேணப்படுகின்றன. உறுதி நிலை அடையப்பட்ட பின்னர் AB, BC, CE ஆகிய கோல்கள் வழியே வெப்பப் பாய்ச்சல் வீதம் (Q) இன் மாறலைப் பின்வரும் வரைபுகளில் எது மிகச் சிறந்த விதத்தில் வகைகுறிக்கின்றது?







41. பன்னிரண்டு (12) தடையிகளைப் பயன்படுத்தி அமைக்கப்பட்ட மூன்று சுற்று வரிப்படங்கள் உருக்களிற் காட்டப்பட்டுள்ளன. மூன்றுயே சுற்றுகளினூடாகப் பாயும் I_a, I_b, I_c ஆகிய ஓட்டங்களுக்கிடையே உள்ள சரியான தொடர்புடைமை யாது?







(1) $I_a > I_b > I_c$
(2) $I_a < I_b < I_c$
(3) $I_a = I_b > I_c$
(4) $I_a = I_b < I_c$
(5) $I_a = I_b = I_c$

42. a இலிருந்து b வரையுள்ள ஒரு வெப்பவியக்கச் செயன்முறையின்போது ஓர் இலட்சிய வாயுவின் ஒரு தரப்பட்ட திணிவின் கனவளவு V உடன் அதன் இடை இயக்கப்பாட்டுச் சக்தி E மாறும் விதம் உருவிற் காட்டப்பட்டுள்ளது. வாயுவின் கனவளவு V உடன் அமுக்கம் P இன் நேரொத்த மாறலை மிகச் சிறந்த விதத்தில் வகைகுறிப்பது





(1)



(2)



(3)



(4)



(5)

43. குறுக்குவெட்டுப் பரப்பளவு A ஐ உடைய ஓர் உருளைக் கொள்கலத்தின் அடியில் உருவிற் காட்டப்பட்டுள்ளவாறு ஆரை r ஐ உடைய ஒரு சிறிய துளை உள்ளது. பரப்பிழுவை T ஐ உடைய ஒரு திரவம் கொள்கலத்தில் ஒரு குறித்த உயரத்திற்கு நிரப்பப்படும்போது திரவம் துளையினூடாகக் கசியத் தொடங்குகின்றது. அவ்வுயரத்தின் அரைவாசிக்குத் திரவம் நிரப்பப்பட்டு ஒரு பொருள் திரவத்தின் மேற்பரப்பு மீது மிதக்க விடப்படுகின்றது. திரவம் துளையினூடாகக் கசிவதற்குப் பொருளுக்கு இருக்க வேண்டிய குறைந்தபட்சத் திணிவு யாது?



(1) $\frac{AT}{2rg}$ (2) $\frac{AT}{rg}$ (3) $\frac{2AT}{rg}$

(4) $\frac{rg}{AT}$ (5) $\frac{2rg}{AT}$

44. காட்டப்பட்டுள்ள சீலிக்கன் திரான்சிஸ்ரர்ச் சுற்று முறையே துண்டிப்புப் பிரதேசத்திலும் உயிர்ப்புப் பிரதேசத்திலும் இருக்கும்போது R இன் பெறுமானங்கள் யாவை?



(1) 5 kΩ , 1·0 kΩ

(2) 5 kΩ , 2·5 kΩ

(3) 5 kΩ , 7·5 kΩ

(4) 100 kΩ , 10 kΩ

(5) 100 kΩ , 50 kΩ

45. உருவிற் காட்டப்பட்டுள்ளவாறு புள்ளி O இல் நிலைப்படுத்தப்பட்டுள்ள ஒரு நடுநிலைத் துணிக்கை சர்வசமத் திணிவுகள் உள்ள P, Q என்னும் இரு சிறிய ஏற்றம்பெற்ற துணிக்கைகளாகத் தேய்கின்றது. பாய அடர்த்தி B ஐ உடைய ஒரு மாறாத, சீரான காந்தப் புலம் தாளின் தளத்திற்குள்ளே வழிப்படுத்தப்படுகின்றது. பின்வருவனவற்றில் எது P, Q ஆகிய இரு ஏற்றம்பெற்ற துணிக்கைகளினதும் பாதைகளைச் சரியாகக் காட்டுகின்றது? (இரு துணிக்கைகளுக்குமிடையே உள்ள நிலைமின் இடைத்தாக்கத்தைப் புறக்கணிக்க)





46. சர்வசமச் செயற்பாட்டு விரியலாக்கிகளின் மூலம் அமைக்கப்பட்டுள்ள A, B, C என்னும் மூன்று சுற்றுகள் உருவிற் காட்டப்பட்டுள்ளன. ஓர் இலட்சிய வோல்ற்றளவு முதலிலிருந்து பெற்ற சர்வசமப் பெய்ப்பு வோல்ற்றளவு V_{in} எல்லா மூன்று சுற்றுகளுக்கும் ஊட்டப்படுகின்றது. மூன்று சுற்றுகளினதும் உரிய பயப்பு வோல்ற்றளவுகளின் V_A, V_B, V_C ஆகிய பருமன்களிடையே உள்ள சரியான ஒப்பீட்டைப் பின்வருவனவற்றில் எது தருகின்றது?



(1) $V_A = V_B = V_C$ (2) $V_A = V_B < V_C$ (3) $V_A > V_B = V_C$

(4) $V_A = V_B > V_C$ (5) $V_A < V_B < V_C$

47. வெப்பநிலை 30 °C ஆகவும் தொடர்பு ஈரப்பதன் (RH) 90% ஆகவும் உள்ள சுற்றாடலில் இருக்கும் வளி 10 °C இற்குக் குளிர்ச்சியாக்கப்பட்டு, வளியில் உள்ள ஈரலிப்பிற் சிறிதளவு ஒரு வளிச்சீராக்கப் பொறியத்தினால் (air-conditioning plant) அகற்றப்படுகின்றது. பின்னர் இவ்வளி 20 °C இற்கு வெப்பமாக்கப்பட்டு, ஒரு கணினி ஆய்கூடத்திற்கு அனுப்பப்படுகின்றது. 10 °C, 20 °C, 30 °C ஆகிய வெப்பநிலைகளில் உள்ள நிரம்பிய நீராவி அமுக்கத்தின் பெறுமானங்கள் முறையே a, b, c ஆகியவற்றினால் தரப்படுமெனின், பொறியத்திலிருந்து அகற்றப்படும் ஈரலிப்பின் விகிதமும் 20 °C இல் உள்ள வளியின் இறுதித் தொடர்பு ஈரப்பதனும் (RH) யாவை?

(1) $\frac{(0{\cdot}9c-a)}{0{\cdot}9c}, \frac{a\times100}{b}\%$ (2) $\frac{(0{\cdot}9c-a)}{0{\cdot}9c}, \frac{c\times100}{b}\%$

(3) $\frac{(0{\cdot}9c-a)}{c}, \frac{a\times100}{b}\%$ (4) $\frac{(c-a)}{c}, \frac{b\times100}{c}\%$

(5) $\frac{(c-a)}{c}, \frac{a\times100}{c}\%$

48. 51 °C வெப்பநிலையில் உள்ள வளி நிரப்பப்பட்டு ஒரு முனையில் அடைக்கப்பட்ட ஒரு குழாயுடன் ஓர் இசைக் கவை ஒலிக்கச் செய்யப்படும்போது ஒரு 4 Hz அடிப்பு மீடிறன் கேட்கின்றது. 127 °C வெப்பநிலையில் உள்ள வளி நிரப்பப்பட்ட குழாயுடன் இசைக் கவை ஒலிக்கச் செய்யப்படும்போது, அதே அடிப்பு மீடிறன் கேட்கின்றது. இரு நிலைமைகளிலும் குழாய் ஒரே மேற்றொனியுடன் ஒலிக்கின்றது. இசைக் கவையின் மீடிறன் யாது? குழாயின் முனைத் திருத்தத்தைப் புறக்கணிக்க. ($\sqrt{324} = 18$)

(1) 56 Hz (2) 60 Hz (3) 66 Hz (4) 76 Hz (5) 80 Hz

49. ஒரு விண்வெளிக் கலம் புவியிலிருந்து சந்திரனை நோக்கி இயங்குகின்றதெனக் கருதுக. தூரம் (s) உடன் அதன் தேறிய நிறை (W) மாறலைப் பின்வரும் வரைபுகளில் எது மிகச் சிறந்த விதத்தில் வகைகுறிக்கின்றது? (ஏனைய பொருள்களின் விளைவைப் புறக்கணிக்க)



(1)



(2)



(3)



(4)



(5)

50. தாளிலிருந்து வெளியே ஒரு மாறா ஓட்டத்தைக் காவுகின்ற ஒரு நீண்ட நேர்க் கம்பி உற்பத்தி O இல் Z-அச்சு வழியே தாளின் தளத்திற்குச் செங்குத்தாக வைக்கப்பட்டுள்ளது. கம்பியை மையமாகக் கொண்டு X-Y தளத்தின் மீது வரையப்பட்ட ஆரை R ஐ உடைய ஓர் அரைவட்டத்தை உரு காட்டுகின்றது. அரைவட்டப் பாதை வழியே காந்தப் பாய அடர்த்தியின் x கூறு (B_x) ஆனது x உடன் மாறலைப் பின்வரும் வரைபுகளில் எது மிகச் சிறந்த விதத்தில் வகைகுறிக்கின்றது?





(1)



(2)



(3)



(4)



(5)

***

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස (උ.පෙළ) විභාගය / க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2022 (2023)

විෂය අංකය
பாட இலக்கம் **01**

විෂයය
பாடம் **பௌதிகவியல்**

ලකුණු දීමේ පටිපාටිය / புள்ளி வழங்கும் திட்டம்
I පත්‍රය / பத்திரம் I

ප්‍රශ්න අංකය வினா இல.	පිළිතුරු අංකය விடை இல.	ප්‍රශ්න අංකය வினா இல.	පිළිතුරු අංකය விடை இல.	ප්‍රශ්න අංකය வினா இல.	පිළිතුරු අංකය விடை இல.	ප්‍රශ්න අංකය வினா இல.	පිළිතුරු අංකය விடை இல.	ප්‍රශ්න අංකය வினா இல.	පිළිතුරු අංකය விடை இல.
01.	4	11.	3	21.	2	31.	5	41.	5
02.	5	12.	3	22.	3	32.	4	42.	1
03.	5	13.	1	23.	4	33.	3	43.	2
04.	1	14.	5	24.	2	34.	4	44.	3
05.	4	15.	2	25.	2	35.	4	45.	1
06.	5	16.	5	26.	4	36.	2	46.	2
07.	4	17.	4	27.	3	37.	4	47.	1
08.	2	18.	2	28.	1	38.	5	48.	4
09.	2	19.	1	29.	5	39.	1	49.	3
10.	3	20.	1	30.	3	40.	2	50.	2

- විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට / ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் 1 x 50 = 50

பகுதி A - அமைப்புக் கட்டுரை

பகுதி A - அமைப்புக் கட்டுரை

எல்லா நான்கு வினாக்களுக்கும் விடைகளை இத்தாளிலேயே எழுதுக.

($g = 10\,m\,s^{-2}$)

1. உருவிற் காட்டப்பட்டுள்ளவாறு பாடசாலை ஆய்கூடத்தில் இருக்கும் ஒழுங்கமைப்பைப் பயன்படுத்தி ஒரு சிறிய கண்ணாடி அடைப்பானின் நிறை (W) ஐயும் அதிலிருந்து ஒரு திரவத்தின் தொடர்பு அடர்த்தியையும் துணியுமாறு நீங்கள் கேட்கப்பட்டுள்ளீர்கள்.



(a) உருவில் உள்ள X, Y ஆகியவற்றினால் வகைகுறிக்கப்படும் உருப்படிகளைக் குறிப்பிடுக.

X : வரைதற் பலகை / இணைகரப் பலகை / இணைகர உபகரணம் ..... (01)

Y : வெள்ளைக் கடதாசி / தாள் **அல்லது** போட்டோப் பிரதி கடதாசி / தாள் ..... (01)

(பலகையும் கடதாசியும் என குறிப்பிடுவதற்கு புள்ளி இல்லை)

(b) (i) கப்பிகள் உராய்வற்றனவா என்பதை நீங்கள் எங்ஙனம் சோதிப்பீர்கள்?

நிறை W ஐ /அடைப்பானை கீழே இழுத்து விடல் ..... (01)

விட்ட பின்னர் இழையின் நடுப்புள்ளி / இடைவெட்டும் புள்ளி , நிறை/ அடைப்பான் அதன் ஆரம்பத் தானத்துக்கு மீள்கிறதா என உறுதிப்படுத்தல் ..... (01)

(ii) உராய்வு இருப்பின், அதனை எங்ஙனம் இழிவளவாக்குவீர்கள்?

மசகு எண்ணெய் **அல்லது** எஞ்சின் எண்ணெய் **அல்லது** இயந்திர எண்ணெய் ஒன்றைப் பிரயோகித்தல் ..... (01)

(எண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் அல்லது கிரீஸ் என குறிப்பிடுவதற்கு புள்ளி இல்லை)

(c) (i) P, Q என்னும் அறிந்த நிறைகளும் நிறை W ஐ உடைய கண்ணாடி அடைப்பானும் உருவிற் காட்டப்பட்டுள்ளவாறு இலேசான இழைகளைப் பயன்படுத்தித் தொங்கவிடப்பட்டுள்ளன. நீங்கள் உரிய இழைகளின் அமைவை எங்ஙனம் சரியாகக் குறிப்பீர்கள்?

மூலை மட்டத்தை பலகைக்கு செங்குத்தாக வைத்து ..... (01)

இழையுடன் மட்டு மட்டாக தொடச் செய்து ..... (01)

போதியளவு / உயர் வேறாக்கத்துடன் / குறைந்தது 5 cm இடைவெளியில் ..... (01)

இரு குற்றுக்களை குறித்தல் ..... (01)

{மாற்று முறை :
இழையின் கீழ் ஒரு தளவாடியை (போதுமான நீளத்தைக் கொண்ட துண்டு) வைத்து ..... (01)
செங்குத்தாக நோக்கி ..... (01)
இழை அதன் விம்பத்தை மறைக்கும் போது ..... (01)
இழையின் விம்பத்தின் இரு முனைகளையும் குறித்தல் ..... (01) }

(ii) ஓர் உகந்த அளவிடையைப் பயன்படுத்தி இணைகரத்தை அமைத்த பின்னர் நீங்கள் நிறை W ஐ எங்ஙனம் துணிவீர்கள்?

மூலை விட்டத்தின் நீளத்தை அளந்து ..... (01)
அதனை தெரிவு செய்த அளவிடையை உபயோகித்து நிறைக்கு மாற்றுக. ..... (01)

(d) (i) திரவத்தின் தொடர்பு அடர்த்தியைத் துணிவதற்கு இப்போது அந்த ஒழுங்கமைப்பு பயன்படுத்தப்படுகின்றது. இரு முகவைகள், நீர், திரவம் ஆகியன தரப்பட்டுள்ளன. நீரில் அல்லது திரவத்தில் அடைப்பானின் தோற்ற நிறையைத் துணிவதற்கு நீங்கள் பின்பற்றும் பரிசோதனைப் படிமுறைகளை எழுதுக.

(நீரில் அல்லது திரவத்தில்) அடைப்பானை முழுமையாக அமிழ்த்தி ..... (01)

அதற்குரிய இணைகரங்களை அமைத்து அதற்கு தொடர்பான மூலை விட்டத்தின் நீளத்தை அளக்க. ..... (01)

(ii) மேற்குறித்த அளவீடுகளிலிருந்து இனங்காண வேண்டிய அடைப்பானின் இரு தோற்ற நிறைகளும் யாவை?

W_1 : நீரில் அடைப்பானின் நிறை ..... (01)
W_2 : திரவத்தில் அடைப்பானின் நிறை ..... (01)

(W_1, W_2 ஆகியன இடமாறி எழுதி இருப்பினும் முழுப் புள்ளியையும் வழங்குக.)

(iii) அடைப்பானின் தோற்ற நிறை குறைவதற்கான **இரு** கோவைகளை W, W_1, W_2 ஆகியவற்றில் எழுதுக.

நீரில் தோற்ற நிறை குறைதல் = $W - W_1$ ..... (01)

திரவத்தில் தோற்ற நிறை குறைதல் = $W - W_2$ ..... (01)

(மேலே பகுதி (ii) இல் எழுதப்பட்ட விடைக்கு ஏற்ப இப் புள்ளிகளை வழங்குக.)

(iv) இதிலிருந்து, மேலே (*d*) (iii) இல் நீங்கள் தந்துள்ள விடைகளைப் பயன்படுத்தித் திரவத்தின் தொடர்பு அடர்த்திக்கான ஒரு கோவையை எழுதுக.

திரவத்தின் தொடர்பு அடர்த்தி $= \frac{W - W_2}{W - W_1}$ ..... (01)

(மேலே பகுதி (iii) யில் எழுதப்பட்ட விடைக்கு ஏற்ப இப்புள்ளியை வழங்குக)

(v) திரவத்தின் தொடர்பு அடர்த்தியின் பெறுமானத்தைப் பாதிக்கும், மேலே (*d*)(i) இற் குறிப்பிடப்பட்ட பரிசோதனை நடைமுறையில் ஏற்படத்தக்க (இணைகரத்தை அமைப்பதற்கு உரியதாக அமையாத) ஒரு வழுவை எழுதுக.

அடைப்பான் முகவையினுடைய அடியை / பக்கச் சுவரை தொடல்

அல்லது

வளிக்குமிழிகள் அடைப்பானில் ஒட்டி இருத்தல் ..... (02)

(சரியான ஒரு விடைக்கு 02 புள்ளிகள்)

2. கலவை முறையைப் பயன்படுத்தி நீரின் ஆவியாக்கல் தன் மறை வெப்பத்தைத் துணியுமாறு நீங்கள் கேட்கப்பட்டுள்ளீர்கள். உருளில் கொதிநீராவியைப் பிறப்பிப்பதற்கு ஆய்கூடத்தில் பயன்படுத்தப்படும் செப்புக் கொதிகலம் காட்டப்பட்டுள்ளது. கொதிநீராவியை வெளியே எடுப்பதற்கு இறப்பர்க் குழாய் B பயன்படுத்தப்படுகின்றது. அத்துடன் ஒரு காவலிடப்பட்ட செப்புக் கலோரிமானியும் ஒரு செப்புக் கலக்கியும் வழங்கப்பட்டுள்ளன.



(*a*) (i) கொதிகலத்தில் உள்ள நீர் மட்டம் போதியதன்றெனின், குழாய் *A* ஐப் பயன்படுத்தி அதனை எங்ஙனம் இனங்காண்பீர்கள்?

வெப்பமாக்கலின் போது குழாய் *A* இயினூடாக கொதி நீராவி வெளி வரும் ..... (02)

(ii) மேலே (*a*)(i) இல் உள்ள வழுவைத் திருத்திய பின்னர் கொதிகலத்தில் கொதி நீராவி பிறப்பிக்கப்படுகின்றது. கொதிநீராவியை வெளியே எடுக்கும் இறப்பர்க் குழாய் தடைப்பட்டிருப்பின், அதனை எங்ஙனம் இனங்காண்பீர்கள்?

வெப்பமாக்கலின் போது குழாய் *A* இனூடாக (கொதி) நீர் வெளிவரும் ..... (02)

(iv) இப்பரிசோதனையில் குழாய் B இலிருந்து வெளியே வரும் கொதிநீராவியை நேரடியாக நீருடன் தொடுத்தல் சரியன்று.

(I) அதற்குரிய காரணத்தை எழுதுக.

கொதி நீராவியுடன் ஒடுங்கிய (கொதி) நீரும் குழாயிலிருந்து வெளிவரலாம் ..... (01)

(II) நீங்கள் இதனை எங்ஙனம் திருத்துவீர்கள்?

இறப்பர் குழாயின் முனையுடன் கொதி நீராவிப் பொறியை இணைத்தல்

அல்லது

படத்தில் சரியான வரிப்படத்தை வரைதல் ..... (02)

(v) இப்பரிசோதனைக்காக உங்களுக்குத் தேவைப்படும் ஏனைய இரு அளவீட்டு உபகரணங்களும் யாவை?

வேறொரு வெப்பமானி ..... (01)

மற்றும் நான்கு / மூன்று புயத்தராசு **அல்லது** [இரசாயனத் தராசு **அல்லது** (ஆய்வுகூட) இலத்திரனியல் தராசு]
..... (01)

(தராசு என நேரடியாகக் குறிப்பிடுவதற்கு புள்ளிகள் இல்லை)

(vi) மேலே (iv)(II) இற் குறிப்பிடப்பட்ட திருத்தத்தைச் செய்த பின்னர் நீங்கள் கலோரிமானியில் உள்ள நீரினுள்ளே கொதிநீராவியை அனுப்புகிறீர்கள். கொதிநீராவி அனுப்பப்படும் கண்ணாடிக் குழாயின் முனையை நீங்கள் எங்ஙனம் சரியாக வைப்பீர்கள்? தரியான நடைமுறையின் கீழ்க் கோடிடுக.

நீர் மட்டத்திற்கு சற்று மேலே/ நீர்மட்டத்தை தொட்டு கொண்டு / நீர்மட்டத்திற்கு கீழே ..... (01)

(vii) இப்பரிசோதனையில் நீங்கள் வாசிப்பதற்கு எதிர்பார்க்கும் வெப்பநிலை அளவீடுகள் யாவை? அவ்வளவீடுகளை மூன்றையே தருக.

θ_1 – (கொதிகலனில்) கொதி நீராவியின் வெப்பநிலை [100°C க்கு புள்ளிகள் இல்லை]
θ_2 – (கலோரி மானியிலுள்ள) நீரினுடைய ஆரம்ப வெப்பநிலை
θ_3 – (நீர் மற்றும் கொதி நீராவி) கலவையினுடைய உயர் வெப்பநிலை ..... (03)

[சரியான ஒழுங்கில் எல்லா மூன்று சரியான விடைகளுக்கும் 03 புள்ளிகள், பிழையான ஒழுங்கில் ஆனால் எல்லா சரியான மூன்று விடைகளுக்கும் 02 புள்ளிகள்; சரியான ஒழுங்கில் இரு விடைகளுக்கு 01 புள்ளி]

{θ_1, θ_2 இனது ஒழுங்கு இடமாறி எழுதியிருப்பின் ஏற்றுக் கொள்ளத்தக்கது }

(f) (i) மேற்குறித்த வெப்பநிலை அளவீடுகளுக்கு மேலதிகமாக இப்பரிசோதனையில் நீங்கள் எடுக்கும் ஏனைய அளவீடுகள் யாவை? அவ்வளவீடுகளை முறையே தருக.

m_1 - கலக்கியுடன் (வெற்று) கலோரிமானியின் / உள்ளடகத்துடன் கலோரிமானியின் திணிவு

m_2 - கலோரிமானி, கலக்கி, மற்றும் நீரின் திணிவு

m_3 - (கொதிநீராவி சேர்க்கப்பட்ட பின்னர்) தொகுதியின்/ கலவையின் மொத்த / இறுதித் திணிவு

..... (02)

[சரியான ஒழுங்கில் எல்லா மூன்று சரியான விடைகளுக்கு 02 புள்ளிகள்; பிழையான ஒழுங்கில் ஆனால் எல்லா மூன்று சரியான விடைகளுக்கு 01 புள்ளி; சரியான ஒழுங்கில் இரு விடைகளுக்கு 01 புள்ளி]

(ii) செம்பினதும் நீரினதும் தன்வெப்பக் கொள்ளளவுகள் முறையே c_c, c_w எனின், நீரின் ஆவியாக்கலின் தன் மறை வெப்பம் (L) ஐத் தீர்ப்பதற்கு ஒரு கோவையை மேலே (e) இலும் (f) இலும் குறிப்பிடப்பட்ட குறியீடுகளில் எழுதுக. சுற்றாடலுடன் வெப்பப் பரிமாற்றம் நடைபெறுவதில்லை எனக் கொள்க.

$$[(m_2 - m_1)c_w + m_1c_c](\theta_3 - \theta_2) = (m_3 - m_2)[L + c_w(\theta_1 - \theta_3)]$$ ..... (03)

[சரியான L.H.S க்கு 01 புள்ளி ; சரியான R.H.S க்கு 01 புள்ளி ; சமப்படுத்துவதற்கு 01 புள்ளி]

{ ஒரு மாணவன் θ_1, θ_2 வை இடமாற்றி எழுதி இருப்பின் மேலுள்ள கோவையில் பொருத்தமான மாற்றங்களை சரி பார்த்து முழுப் புள்ளியையும் வழங்குக. கோவையில் θ_1 அல்லது θ_2 வை 100°C ஆக எடுப்பினும் ஏற்றுக்கொள்ளத்தக்கது }

(g) சுற்றாடலுடன் வெப்பம் பரிமாற்றப்படுகின்றமையால் ஏற்படும் வழுவை இழிவளவாக்குவதற்கு இப் பரிசோதனையில் நீங்கள் எடுக்கும் முற்காப்பு யாது?

(பனிக்கட்டியை சேர்ப்பதனால்) நீரின் தொடக்க (ஆரம்ப) வெப்பநிலையை அறை வெப்பநிலையிலிருந்து 5°C இனால் (சில அளவினால்) குறைத்து ..... (01)

மற்றும் கலவையினுடைய உயர் வெப்பநிலையை அறை வெப்பநிலையிலும் 5°C (அதே அளவினால்) அதிகரிக்கும் வரை கொதி நீராவியை செலுத்துதல் ..... (01)

3. வளியில் ஒலியின் கதி (v) ஐத் துணிவதற்குப் பாடசாலை ஆய்கூடத்தில் பயன்படுத்தப்படும் வழக்கமான பரிசோதனை ஒழுங்கமைப்பு உருவிற் காட்டப்பட்டுள்ளது. இவ்வொழுங்கமைப்பில் இரு முனைகளிலும் திறந்த ஒரு கண்ணாடிக் குழாய், நீர் நிரம்பிய ஓர் உயரமான கண்ணாடிச் சாடி, ஓர் இசைக் கவைத் தொகுதி ஆகியன அடங்கியுள்ளன. வளியில் ஒலியின் கதியைத் துணிவதற்காகப் பரிவு முறை பயன்படுத்தப்படுகின்றது.



(*a*) இப்பரிசோதனையைச் செய்வதற்குத் தேவையான ஏனைய அளவீட்டு உபகரணம் யாது?

மீற்றர் கோல் ..... (01)

(*b*) பின்வரும் பூரணமற்ற கூற்றில் உள்ள வெற்றிடத்தை உகந்த சொல்லைப் பயன்படுத்தி நிரப்புக.

ஒரு பொருள் வேறொரு பொருளின் இயற்கை மீடிறனுடன் அதிரும்போது முதலாம் பொருள் இரண்டாம் பொருளுடன் பரிவுருகின்றது. ..... (01)

(*c*) (i) பரிவின்போது குழாயில் எவ்வகை அலை உண்டாகின்றது? சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

(1) நெட்டாங்கு / குறுக்கு ..... (01)

(2) விருத்தி / நிலையான ..... (01)

(ii) நீங்கள் மேலே (*c*) (i) இல் தெரிந்தெடுத்த அலை எங்ஙனம் உண்டாகின்றது?

(நீர் மேற்பரப்பிலிருந்து) தெறிப்படைந்த அலையுடன் படும் அலையின் மேற் பொருந்துகையால் ..... (01)

(*d*) குழாயின் முதலாம் அதிர்வு வகைக்கு (அடிப்படை) உரிய பரிவு நீளத்தைச் செம்மையாகப் பெறுவதற்கு நீங்கள் பின்பற்றும் பரிசோதனை நடைமுறையைப் படிமுறைகளாகக் குறிப்பிடுக.

- குழாயை முற்றாக அமிழ்த்துதல் / வளி நிரலில் குறைந்த நீளத்திலிருந்து ஆரம்பித்தல். ..... (01)
- குழாயின் மேல் / திறந்த முனைக்கு மேலே அதிரும் இசைக்கவையை பிடித்தல். ..... (01)
- உரத்த / உயர்வு ஒலி கேட்கும் வரைக்கும் (அப்போது பரிவு நிகழும்) குழாயை நீரிலிருந்து உயர்த்துதல் / வளி நிரலின் நீளத்தை அதிகரித்தல் .....(01)

(*e*) ஒரு தரப்பட்ட இசைக் கவையின் மீடிறன் f இற்கு முதலாம் அதிர்வு வகைக்கும் இரண்டாம் அதிர்வு வகைக்கும் ஒத்த பரிவு நீளங்களை நீங்கள் அளக்க வேண்டியுள்ளது.

(i) முதலாம் அதிர்வு வகைக்கு ஒத்த பரிவு நீளம் l_1 எனின், l_1 இற்குரிய ஒரு கோவையை அலைநீளம் λ, குழாயின் முனைத் திருத்தம் e ஆகியவற்றில் எழுதுக.

$$l_1 = \frac{\lambda}{4} - e$$ ..... (01)

(ii) இரண்டாம் அதிர்வு வகைக்கு ஒத்த பரிவு நீளம் l_2 எனின், l_2 இற்குரிய ஒரு கோவையை அலைநீளம் λ, குழாயின் முனைத் திருத்தம் e ஆகியவற்றில் எழுதுக.

$$l_2 = \frac{3\lambda}{4} - e$$ ..... (01)

(ஒரு மாணவன் $l_1 + e = \frac{\lambda}{4}$ எனவும் $l_2 + e = \frac{3\lambda}{4}$ எனவும் எழுதி இருப்பின் 01 புள்ளி மாத்திரம் வழங்குக)

(iii) இதிலிருந்து, $(l_2 - l_1)$ இற்கான ஒரு கோவையை λ இல் எழுதுக.

$$l_2 - l_1 = \frac{\lambda}{2}$$ ..... (01)

(iv) $(l_2 - l_1)$ ஐப் பெறுவதன் அனுகூலம் யாது?

குழாயினுடைய முனைவுத் திருத்தம் / e நீக்கப்படல் ..... (01)

(v) மேலே (e) (iii) இல் எழுதப்பட்ட கோவையில் v ஐயும் f ஐயும் பிரதியிட்டு, ஒரு நேர்கோட்டு வரைபைப் பெறுவதற்கு அதனை மீளவொழுங்குபடுத்துக.

$$l_2 - l_1 = \frac{v}{2f}$$ ..... (01)

(f) கீழே காட்டப்பட்டுள்ள நெய்யரியில் $\frac{1}{f}$ இற்கு எதிரே $(l_2 - l_1)$ இன் வரைபு தரப்பட்டுள்ளது. வரைபைப் பயன்படுத்தி வளியில் ஒலியின் கதி v ஐ ($m\,s^{-1}$ இற) கணிக்க.



படித்திறனை $\frac{v}{2}$ ஆக இனங்காண்பதற்கு ..... (01)

கீழ் புள்ளியை (1.9, 32) ஆக தெரிதல் ..... (01)

மேல் புள்ளியை (3.9, 65) ஆக தெரிதல் ..... (01)

[வேறு ஏதாவது ஆள்கூறுகளுக்கு புள்ளிகள் இல்லை]

படித்திறன் $\frac{(65-32)\times 10^{-2}}{(3.9-1.9)\times 10^{-3}}$ **அல்லது** $\frac{(65-32)}{(3.9-1.9)\times 10^{-3}}$ ..... (01)

(படித்திறனைக் கணிப்பதற்காக)

$v = 330\ m\,s^{-1}$ ..... (01)

{ஒரு மாணவன் படித்திறனை கணிப்பதற்காக வேறு ஆள்கூறுகளை தெரிவு செய்து v இற்கான சரியான விடையை பெறுவானாயின் 03 புள்ளிகளை மட்டும் வழங்குக, அதாவது படித்திறனை இனங்காண்பதற்கும், படித்திறனை கணிப்பதற்கும், மற்றும் இறுதி விடைக்கும்}

(g) மேலே (a) இற் குறிப்பிடப்பட்ட அளவீட்டு உபகரணத்திற்குப் பதிலாகப் பரிவு நீளங்களைச் செம்மையாகத் துணிவதற்கு ஒரு மாற்று முற்றையத் தெரிவிக்க.

அளவிடை பொருத்தப்பட்ட பரிவுக் குழாயை உபயோகித்தல் / அளவு கோடிடப்பட்ட பரிவுக் குழாயை உபயோகித்தல். ..... (01)

[நகரும் நுணுக்குக் காட்டிக்கு புள்ளி இல்லை ஏனெனில் அளக்கப்படும் உயரங்கள் பெரியவை]

(h) வளியில் ஒலியின் கதியை எடுத்துரைக்கும்போது தரப்பட வேண்டிய அத்தியாவசியப் பரமானம் யாது?

(அறை / வளி / ஆய்வு கூட / சூழல்) வெப்பநிலை ..... (01)

4. ஓர் அழுத்தமானியைப் பயன்படுத்தி இரு கலங்களின் E_1, E_2 என்னும் மின்னியக்க விசைகளை ஒப்பிடுவதற்கு ஒரு மாணவன் ஒரு பரிசோதனையைத் திட்டமிட்டுள்ளான். அதற்காகப் பயன்படுத்தத்தக்க பூரணமற்ற வரிப்படம் உரு (1) இற் காட்டப்பட்டுள்ளது. சுற்றுடன் இணைக்கத்தக்க ஏனைய உருப்படிகள் புறம்பாகக் காட்டப்பட்டுள்ளன.



உரு (1)

(a) கீழே உள்ள உருக்களில் காட்டப்பட்டிருக்கும் உருப்படிகளைப் பெயரிடுக.



A – செருகு சாவி



B – தட்டற் சாவி



C – இருவழி ஆளி / சாவி



D – வழுக்கி / தொடுசாவி



E – (மையப் பூச்சிய மில்லி) வோற்றுமானி



F – மையப் பூச்சிய கல்வனோமானி / மைக்ரோ அம்பியர் மானி

..... (03)

[எல்லா சரியான விடைகளுக்கும் – 03 புள்ளிகள்]
[ஏதாவது ஐந்து /நான்கு சரியான விடைகளுக்கு – 02 புள்ளிகள்]
[ஏதாவது மூன்று / இரண்டு சரியான விடைகளுக்கு – 01 புள்ளி]

(b) உரு (1) இல் உள்ள இடைவெளி 1, இடைவெளி 2, இடைவெளி 3, இடைவெளி 4 ஆகியவற்றில் இணைக்கப்பட வேண்டிய, மேலே (a)இல் தரப்பட்டுள்ள ஒவ்வோர் உருப்படிக்கும் உரிய சரியான எழுத்தை எழுதுக.

இடைவெளி 1 : C இடைவெளி 2 : F
இடைவெளி 3 : D இடைவெளி 4 : A ..... (03)

[எல்லா விடைகளும் சரியாயின் – 03 புள்ளிகள்]
[ஏதாவது மூன்று சரியான விடைகளுக்கு – 02 புள்ளிகள்]
[ஏதாவது இரு சரியான விடைகளுக்கு – 01 புள்ளி]

(c) மின்னியக்க விசை (மி.இ.வி.) E_0 ஐத் தரும் கலத்தின் வகையைப் பெயரிட்டு, E_0 இன் பெறுமானத்தை எழுதுக.

ஒரு 2 V ஈய அமில சேமிப்புக்கலம் **அல்லது** (இரண்டு தொடராக இணைக்கப்பட்ட) 1.5 V Ni–Cd கலங்கள்

..... (02)

(கலத்தின் வகைக்கு 01 புள்ளி, மின்னியக்க விசைப் பெறுமானத்திற்கு 01 புள்ளி)

(d) அழுத்தமானிக் கம்பியின் தடையுடன் ஒப்பிடும்போது மி.இ.வி. E_0 ஐ உடைய கலத்தின் அகத் தடை ஏன் மிகச் சிறியதாக இருத்தல் வேண்டும்?

கலத்திற்கு குறுக்கேயான அழுத்த வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் அழுத்தமானிக் கம்பிக்கு (AB) குறுக்கேயான அழுத்த வீழ்ச்சி பெரிதாக இருத்தல் வேண்டும்.

அல்லது

கலத்திற்கு குறுக்கேயான அழுத்த வீழ்ச்சி அழுத்த மானிக் கம்பி (AB) க்கு குறுக்கேயான அழுத்த வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் குறைவாக இருத்தல் வேண்டும். ..... (01)

(e) இப்பரிசோதனையைச் செய்வதற்கு E_1, E_2, E_0 ஆகியன தொடர்பாகச் சில நிபந்தனைகளைத் திருப்தியாக்குதல் வேண்டும். அவை யாவை?

E_1 ஆனது E_0 இலும் குறைவாக இருத்தல் வேண்டும் **அல்லது** $E_1 < E_0$ ..... (01)

E_2 ஆனது E_0 இலும் குறைவாக இருத்தல் வேண்டும் **அல்லது** $E_2 < E_0$ ..... (01)

(f) ஓர் இலட்சியமற்ற வோல்ற்றுமானியுடன் ஒப்பிடும்போது மி.இ.வி. ஐச் செம்மையாக அளப்பதற்கு அழுத்தமானி ஓர் உகந்த உபகரணமாகக் கருதப்படுகின்றது. இதற்குரிய காரணம் யாது?

இலச்சியமற்ற வோல்ற்மானியானது கலத்தின் மின்னியக்க விசையை விட முடிவிடங்களுக்கிடையிலான அழுத்த வித்தியாசத்தினை அளக்கின்றது. ..... (01)

அத்துடன் அழுத்தமானி சமநிலைப் படுத்தப்பட்ட நிலையில் கலத்திலிருந்து மின்னோட்டத்தை பெறாமையினால் மின் இயக்க விசையை அளக்கின்றது **அல்லது** சமநிலையில் அழுத்தமானி பூச்சிய திரும்பல் முறையை (null method) உபயோகிக்கின்றது.

..... (01)

(g) அழுத்தமானிக் கம்பியின் குறுக்குவெட்டுப் பரப்பளவு ஏன் சீராக இருத்தல் வேண்டும்?

கம்பி வழியே சீரான / மாறா அழுத்த வீழ்ச்சியை அல்லது சீரான / மாறா அழுத்தப் படித்திறனை பெறுவதற்கு ..... (01)

(h) (i) E_1/E_2 விகிதத்தைத் துணிவதற்குப் பின்பற்ற வேண்டிய பரிசோதனை நடைமுறையை எழுதுக.

இரு வழி ஆளியை உபயோகித்து ஒரு கலத்தை (மி.இ.வி E_1) மட்டும் இணைத்து சமநிலை நீளத்தைப் பெறுக. ..... (01)

பின்னர் மற்றைய கலத்தினை (மி.இ.வி E_2) இணைத்து தொடர்பான சமநிலை நீளத்தைப் பெறுக. ..... (01)

(ii) E_1, E_2 ஆகியவற்றை ஒத்த மேலே (h) (i) இல் எடுத்த அளவீடுகள் முறையே x_1, x_2 எனின், E_1/E_2 விகிதத்துக்குரிய ஒரு கோவையை எழுதுக.

$$\frac{E_1}{E_2} = \frac{x_1}{x_2}$$ ..... (01)

(x இற்குப் பதிலாக l என எழுதுவதற்கு புள்ளி இல்லை)

(*i*) (i) வேறொரு மாணவன் உரு (2) இற் காட்டப்பட்டுள்ள 6 m நீளமுள்ள அழுத்தமானிக் கம்பியின் பலித (பயன்படும்) நீளத்தை மாற்றி ஒரு வரைபு முறையைப் பயன்படுத்தி E_1/E_2 விகிதத்தைத் துணிவதற்குத் திட்டமிட்டுள்ளான். இங்கு அவன் பின்பற்ற வேண்டிய பரிசோதனை நடைமுறை யாது?



உரு (2)

முடிவிடம் B இனை ஒரு மீற்றர் கம்பியின் ஒவ்வொரு முடிவிடத்திற்கும் $(B_1, B_2, \ldots\ldots B_6)$ இணைத்து ..... (01)

ஒத்த சமநிலை நீளங்களை அளக்க ..... (01)

(ii) மேலே (*i*)(i) இல் வரையப்படத்தக்க வரைபின் படித்திறன் m ஆகவும் E_1 இன் பெறுமானம் அறியப்பட்டும் இருப்பின், E_2 இற்குரிய ஒரு தொடர்புடைமையை m, E_1 ஆகியவற்றில் எழுதுக.

$E_2 = \frac{E_1}{m}$ அல்லது $E_2 = mE_1$ ..... (01)

සියලුම හිමිකම් ඇවිරිණි./முழுப் பதிப்புரிமையுடையது/[All Rights Reserved]
இலங்கை பரீட்சைத் திணைக்களம் இலங்கை பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022 (2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022 (2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022 (2023)

භෞතික විද්‍යාව II பௌதிகவியல் II Physics II	பகுதி B - கட்டுரை	01 T II

நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
($g = 10\ m\ s^{-2}$)

● குறிப்பு: ஓர் உதாரணமாக எண் 65210 ஐ இரு தசம தானங்களுக்கு மட்டந்தட்டிய பின்னர் $6{\cdot}52\times10^4$ என விஞ்ஞானக் குறிப்பீட்டில் (scientific notation) எழுதலாம்.

5. (*a*) ஒரு பிசுக்கற்ற, நெருக்கமும் பாய்மத்தின் ஓர் உறுதியான பாய்ச்சலுக்குப் பேணுப் சமன்பாட்டை $P + \frac{1}{2}\rho v^2 + h\rho g =$ மாறிலி என எழுதலாம். இங்கு எல்லாக் குறியீடுகளுக்கும் அவற்றின் வழக்கமான கருத்து உண்டு. சமன்பாட்டின் இடக்கைப் பக்கத்தில் உள்ள பதங்களை இனங்காண்க.

(*b*) கீழ் மேற்பரப்பு வளைந்த பிற்பக்க ஸ்பொயிலர் (rear spoiler) உள்ள ஓர் ஓட்டப் பந்தயக் கார் (racing car) உரு (1) இற் காட்டப்பட்டுள்ளது. மோட்டர்க் கார் உயர் கதியிற் செல்லும்போது பேணுயீ கோட்பாட்டிற்கேற்ப ஸ்பொயிலர் மீது ஒரு விசை கீழ்நோக்கித் தாக்குகின்றது.

தரை தொடர்பாக மாறா வேகம் v உடன் வளியினூடாக இடப் பக்கத்தை நோக்கிக் கிடையாகச் செல்லும் ஓர் ஓட்டப் பந்தயக் காரின் பிற்பக்க ஸ்பொயிலரின் நிலைக்குத்துக் குறுக்குவெட்டு உரு (2) இற் காட்டப்பட்டுள்ளது.



உரு (1)

(i) கார் தொடர்பாகப் புள்ளி X இல் வளியின் வேகம் யாது? தரை தொடர்பாக வளி ஓய்வில் இருக்கின்றதெனக் கொள்க.

(ii) உரு (2) இற் காட்டப்பட்டுள்ளவாறு ஸ்பொயிலரிலிருந்து அப்பால் இருக்கும் ஒரு கற்பனைப் பாய்ச்சற் குழாயின் குறுக்குவெட்டுப் பரப்பளவு A_1 உம் ஸ்பொயிலரின் கீழ் மேற்பரப்பில் அப்பாய்ச்சற் குழாயின் ஒத்த குறுக்குவெட்டுப் பரப்பளவு A_2 உம் ஆகும். $\frac{A_1}{A_2} = 1{\cdot}2$ எனின், கார் தொடர்பாக ஸ்பொயிலரின் கீழே பாயும் வளியின் கதி (v_2) இற்குரிய ஒரு கோவையை v இல் எழுதுக.



உரு (2)

(iii) ஸ்பொயிலரின் பலிதக் (பயன்படும்) கிடைக் குறுக்குவெட்டுப் பரப்பளவு $0{\cdot}2\ m^2$ எனின், ஸ்பொயிலர் மீது கீழ்நோக்கித் தாக்கும் விசையைக் கணிக்க. $v = 360\ km\ h^{-1}$ உம் வளியின் அடர்த்தி $= 1{\cdot}2\ kg\ m^{-3}$ உம் ஆகும்.

(iv) தரை தொடர்பாக ஒரு மாறா வேகத்தில் இடமிருந்து வலமாக ஒரு காற்று கிடையாக வீசுமெனின், மேலே (*b*) (iii) இற் கணித்த விசை அதிகரிக்குமா, குறையுமா? கணிப்பு எதுவுமின்றி உங்கள் விடைக்குரிய காரணங்களைத் தருக.

(*c*) உயர் கதியில் செல்லும் ஒரு கார் மீது வளி காரணமாகத் தாக்கும் ஈருகை (drag) விசை (F_d) ஆனது $F_d = \frac{1}{2}C\rho Av^2$ இனால் தரப்படுகின்றது. இங்கு C ஆனது ஈருகைக் குணகமும் ρ ஆனது வளியின் அடர்த்தியும் A ஆனது வளியை நோக்கும் காரின் பலித (பயன்படும்) முகப்புப் பரப்பளவும் v ஆனது வளி தொடர்பாகக் காரின் கதியும் ஆகும். ஸ்பொயிலர்கள் கார்கள் மீது உள்ள வளிப் பாய்ச்சலின் திசையையும் மாற்றி ஈருகைக் குணகத்தைக் குறைக்கின்றன.

(i) C பரிமாணமற்றது எனக் காட்டுக.

(ii) $C = 0{\cdot}3$, $A = 1{\cdot}4\ m^2$, $\rho = 1{\cdot}2\ kg\ m^{-3}$, $v = 360\ km\ h^{-1}$ எனக் கொண்டு மேலே (*b*) இற் குறிப்பிட்ட ஓட்டப் பந்தயக் கார் மீது தாக்கும் ஈருகை விசை F_d ஐக் கணிக்க. தரை தொடர்பாக வளி ஓய்வில் இருக்கின்றதெனக் கொள்க.

(iii) கார் மாறா வேகம் $360\ km\ h^{-1}$ இற் செல்லும்போது ஈருகை விசையை வெல்வதற்குத் தேவையான வலு (P) ஐக் கணிக்க.

(iv) கார் ஓய்விலிருந்து தொடங்கி $360\ \text{km h}^{-1}$ கதியை அடைகின்றது. இச்செயன்முறையில் ஈருகை விசையை வெல்வதற்குத் தேவையான சராசரி வலு $\frac{P}{2}$ என ஒரு மாணவன் வாதிடுகிறான். இங்கு P ஆனது மேலே (c) (iii) இற் கணித்த பெறுமானமாகும். மாணவனின் வாதத்துடன் நீங்கள் இணங்குகிறீர்களா எனக் காரணங்கள் தந்து குறிப்பிடுக.

(v) கார் மீது தாக்கும் ஏனைய உராய்வு விசைகளை வெல்வதற்குத் தேவையான வலு 48 kW ஆகும். ஒரு லீற்றர் பெற்றோல் தகனமடையும்போது விடுவிக்கப்படும் சக்தி $4{\cdot}0\times10^{7}\ \text{J}$ ஆகும். இச்சக்தியில் 15% மாத்திரம் காரை இயங்கச் செய்வதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. கார் மாறாக் கதி $360\ \text{km h}^{-1}$ இற் செல்லும்போது காரின் எரிபொருள் திறனை லீற்றருக்கான km இல் துணிக.

(vi) தரை தொடர்பாகக் காற்று மாறா வேகம் $10\ \text{m s}^{-1}$ உடன் கிடையாக இடமிருந்து வலமாக வீசுமெனின், கார் மாறா வேகம் $360\ \text{km h}^{-1}$ இற் செல்லும்போது ஈருகை விசையை வெல்வதற்குத் தேவையான வலு (P') ஐக் கணிக்க (உங்கள் விடையை kW இற் கிட்டிய முழுவெண்ணிற்குத் தருக).

5. *(a)* P - அமுக்கம் / ஓரலகு கனவளவிற்கான அமுக்க சக்தி ..... (01)

$\frac{1}{2}\rho v^2$ - ஓரலகு கனவளவிற்கான இயக்க சக்தி ..... (01)

hpg - ஓரலகு கனவளவிற்கான (ஈர்ப்பு) அழுத்த சக்தி (ஓர் மாட்டேற்று மட்டத்தில் இருந்து) ... (01)

(b) (i) கார் தொடர்பாக புள்ளி X இல் வளியின் வேகம் - v / அல்லது $\vec{v}$ / அல்லது v ஆனது இடமிருந்து வலமாக ..... (01)

$\left[v_{A,C} = v_{A,G} + v_{G,C} = 0 - v\right]$

(ii) $A_2 v_2 = A_1 v$ அல்லது $A_2 v_2 = 1.2 A_2 v$ ..... (01)

$v_2 = 1.2v$ ..... (01)

(iii) ஸ்பொயிலருக்கு மேலேயும் கீழேயுமான வளியின் அமுக்கம் P_1, P_2 எனின் பேணுயியின் சமன்பாட்டினை பிரயோகிப்பதனால்

$P_1 + \frac{1}{2}\rho v^2 = P_2 + \frac{1}{2}\rho v_2^2$ அல்லது $P_1 + \frac{1}{2}\rho v^2 = P_2 + \frac{1}{2}\rho (1.2v)^2$ ..... (01)

$P_1 - P_2 = \frac{1}{2}\rho\left[(1.2v)^2 - v^2\right]$

$v = \frac{360\times10^3}{60\times60}$ (km h^{-1} ஐ m s^{-1} இற்கு மாற்றுவதற்கு) ..... (01)

$v = 100\ \text{m s}^{-1}$

$P_1 - P_2 = \frac{1}{2}\times1.2\times100^2(1.44-1)$

ஸ்பொயிலர் காரணமாக கார் மீது கீழ் நோக்கி தொழிற்படும் விளையுள் விசை = $(P_1 - P_2) \times 0.2$ ..... (01)
(அமுக்க வித்தியாசத்தினதும் பரப்பினதும் பெருக்கத்திற்காக)

$= \frac{1}{2} \times 1.2 \times 100^2 \times 0.44 \times 0.2$ ..... (01)

(சரியான பிரதியீட்டுக்கு)

$= 528$ N ..... (01)

(iv)அதிகரிக்கும் ..... (01)

கார் தொடர்பாக வளியின் வேகம் அதிகரிக்கும் **அல்லது** v/v_2 அதிகரிக்கும் ..... (01)

அல்லது $v_{A,C} = v_{A,C} + v_{G,C} = -v" - v$ இங்கு v'' ஆனது தரை தொடர்பாக காற்றின் வேகம்

(c) (i) விசையின் பரிமாணம் (LHS) = MLT^{-2} ..... (01)

$\rho A v^2$ இனது பரிமாணம் = $ML^{-3}L^2L^2T^{-2}$ ..... (01)
= MLT^{-2}

ஆகவே C பரிமாணமற்றது

(ii) ஈருகை விசை $F_d = \frac{1}{2} C \rho A v^2 = \frac{1}{2} \times 0.3 \times 1.2 \times 1.4 \times 100^2$ ..... (01)

(சரியான பிரதியீட்டுக்கு)

$F_d = 2520$ N ..... (01)

(iii)ஈருகை விசையை வெல்லுவதற்குத் தேவையான வலு (P)= $F_d v$ ..... (01)
= 2520 x 100
= 252 kW (252000 W) ..... (01)

(iv)இணங்கவில்லை ..... (01)

வலு (P) ஆனது v உடன் ஏக பரிமாணமாக மாறுபடமாட்டாது **அல்லது** வலுவானது v^3 இற்கு விகித சமமானது ஆனால் v இற்கு அல்ல ..... (01)

(v) ஒரு லீற்றர் பெற்றோலினை தகனமடையச் செய்வதன் மூலம் காரை இயக்கத் தேவையான சக்தி $= \frac{4.0 \times 10^7}{100} \times 15$ ..... (01)

$= 6 \times 10^6$ J லீற்றருக்கு

தேவையான மொத்த வலு = 252 + 48 = 300 kW ..... (01)
(கூட்டலுக்காக)

ஒரு லீற்றர் பெற்றோலினை தகனமடையச் செய்வதன் மூலம் கார் இயங்கும் நேரம் $= \frac{6\times10^6}{300\times10^3}$ ..... (01)

(பிரித்தலுக்கு)

ஒரு லீற்றர் பெற்றோலினை தகனமடையச் செய்வதன் மூலம் கார் இயங்கும் தூரம்

$= \frac{6\times10^6}{300\times10^3}\times100$ ..... (01)

(100 இனால் அல்லது 100×10^{-3} இனால் பெருக்குவதற்கு)

காரின் எரிபொருள் திறன் லீற்றருக்கான km இல் = 2 km லீற்றருக்கு ..... (01)

{ மாற்று முறை :

1 km கார் இயங்குவதற்கு எடுக்கும் நேரம் (செக்கனில்) $= \frac{360}{60\times60}$ ..... (01)

∴ ஒரு லீற்றர் பெற்றோலினை தகனமடையச் செய்வதன் மூலம் கார் இயங்கும் தூரம்

$= \frac{6\times10^6}{300\times10^3}\times\frac{360}{60\times60}$ ..... (01)

=2 km லீற்றருக்கு ..... (01) }

(vi)வளி தொடர்பாக காரின் கதி = 100 + 10 (கூட்டலுக்காக) ..... (01)

புதிய ஈருகை விசை $F_d = \frac{1}{2}\times0.3\times1.2\times1.4\times110^2$ ..... (01)

(சரியான பிரதியீட்டுக்கு)

ஈருகை விசையை வெல்வதற்கு தேவையான வலு

$P' = \frac{1}{2}\times0.3\times1.2\times1.4\times110^2\times100$ .....(01)

(ஈருகை விசையை 100 இனால் பெருக்க)

= 305 kW ..... (01)

6. (a) (i) ஒரு வானியல் (ஒளியியல்) தொலைகாட்டியின் கோணப் பெரிதாக்கம் (m) ஐ வரையறுக்க.

(ii) ஏகபரிமாணப் பெரிதாக்கத்துடன் ஒப்பிடும்போது ஓர் ஒளியியல் உபகரணத்திற்குக் கோணப் பெரிதாக்கம் ஏன் ஒரு சிறந்த அளவீடாகும்?

(b) குவியத் தூரம் f_o ஐ உடைய ஒரு பொருளி வில்லை L_o ஐயும் குவியத் தூரம் f_e ஐ உடைய ஒரு பார்வைத்துண்டு L_e ஐயும் பயன்படுத்தி ஒரு வானியல் தொலைகாட்டி அமைக்கப்பட்டுள்ளது.

(i) ஒரு தொலைகாட்டியின் இயல்பான செப்பஞ்செய்கை என்பதன் கருத்து யாது?

(ii) தொலைகாட்டி இயல்பான செப்பஞ்செய்கையில் இருக்கும்போது ஒரு தெளிவாகப் பெயரிட்ட கதிர் வரிப்படத்தை வரைக.

(iii) கதிர் வரிப்பட்த்தைப் பயன்படுத்தித் தொலைகாட்டியின் கோணப் பெரிதாக்கத்திற்கு ஒரு கோவையைப் பெறுக.

α (ஆரையன்களில்) இன் மிகச் சிரிய பெறுமானங்களுக்கு $\tan(\alpha)=\alpha$ ஆகும்.

(c) (i) $f_o = 100\,\text{cm}$ ஆகவும் $f_e = 10\,\text{cm}$ ஆகவும் உள்ள ஒரு வானியல் தொலைகாட்டி சந்திரனின் இறுதி விம்பம் கண்ணின் தெளிவுரைப் பார்வையின் இழிவுத் தூரத்தில் (D=25 cm) உண்டாகுமாறு செப்பஞ்செய்யப்பட்டுள்ளது. சந்திரன் வெறுங்கண்ணில் கோணம் 0·5° ஐ எதிரமைக்கின்றது. இச்செப்பஞ் செய்கையில் தொலைகாட்டியினூடாகச் சந்திரனின் விம்பத்தினால் கண்ணில் எதிரமைக்கப்படும் (பாகையினாலான) கோணத்தையும் கோணப் பெரிதாக்கத்தையும் கணிக்க. கண்ணிற்கும் பார்வைத்துண்டிற்குமிடையே உள்ள தூரம் புறக்கணிக்கத்தக்கதெனக் கொள்க. நீங்கள் 1° = 0·018 ஆரையன் எனப் பயன்படுத்தலாம்.

(ii) ஓர் உகந்த மாற்றத்தைச் செய்த பின்னர் மேற்குறித்த தொலைகாட்டி சந்திரனின் ஒரு மெய் விம்பத்தை ஒரு திரை மீது பெறுவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. குவியப் புள்ளிகளையும் தூரங்களையும் தெளிவாகக் குறித்து இச்சந்தர்ப்பத்திற்குக் கதிர் வரிப்படத்தை வரைக.

(iii) மேலே (c) (ii) இற் குறிப்பிட்ட மாற்றத்தைச் செய்த பின்னர் பார்வைத்துண்டிலிருந்து 30 cm இல் வைக்கப்பட்டுள்ள திரை மீது மெய் விம்பம் உண்டாகுமெனின், திரை மீது உண்டாகும் சந்திரனின் விம்பத்தின் பருமனைக் (விட்டம்) கணிக்க.

(iv) ஐக்கிய அமெரிக்க அரசுகளில் விஸ்கொன்சினில் யேகஸ் நோக்கத்தில் (Yerkes Observatory) 1897 தொடக்கம் இன்று வரைக்கும் தொழிற்படும் ஒரு பெரிய, பிரமுமை வாய்ந்த வானியல் முறி தொலைகாட்டி உள்ளது. இந்நோக்கதம் நவீன வான்பௌதிகவியலின் பிறந்தகமாகும். இதில் வான் பொருள்களின் 170 000 இற்கு மேற்பட்ட ஒளிப்படத் தகடுகள் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன.

யேக்ஸ் தொலைகாட்டியின் பொருளி வில்லையின் குவியத் தூரம் 19·0 m ஆகும். பார்வைத்துண்டிற்குப் பின்னால் 30 cm இல் வைக்கப்பட்டுள்ள ஓர் ஒளிப்படத் தகட்டின் மீது 17·1 cm விட்டமுள்ள சந்திரனின் ஒரு மெய் விம்பத்தை அது தருகின்றது. யேக்ஸ் தொலைகாட்டியின் பார்வைத்துண்டின் குவியத் தூரத்தையும் இச்சந்தர்ப்பத்தில் கோணப் பெரிதாக்கத்தையும் கணிக்க (கோணப் பெரிதாக்கத்தைக் கிட்டிய முழுவெண்ணிற்குத் தருக).

6. (a) (i) கோணப் பெரிதாக்கம் $m = \dfrac{\alpha'}{\alpha}$ ——————— (சமன்பாடு 1) .....(01)

இங்கு α' இறுதி விம்பத்திலிருந்து வரும் கதிர்களினால் கண்ணில் எதிரமைக்கும் கோணம்

α பொருளிலிருந்து வரும் கதிர்கள் வெற்றுக் கண்ணில் எதிரமைக்கும் கோணம்

(இரண்டும் சரியாயின்) .....(01)

(ii) விம்பத்தின் ஏக பரிமான பெரிதாக்கல் பொருளின் தூரம் மற்றும் விம்பத்தின் பருமன் இரண்டிலும் தங்கியுள்ளது. .....(01)

எனினும் (கண்ணின்) விழித்திரையில் உருவாகும் விம்பத்தின் பருமன் விம்பத்திலிருந்து வரும் கதிர்களினால் கண்ணில் எதிரமைக்கும் கோணத்தில் மட்டும் தங்கியுள்ளது .....(01)

எனவே கோண பெரிதாக்கம் ஏக பரிமான பெரிதாக்கத்துடன் ஒப்பிடுகையில் சிறந்த ஒரு அளவீடாகும்.

(*b*) (i) இறுதி விம்பம் முடிவிலியில் உருவாகும் பொழுது **அல்லது** கண்ணானது தளர்ந்த நிலையில் உள்ள போது .....(01)

(ii)



L_o இல் காணப்படும் இரு சமாந்தர கதிர்களுக்கும் மற்றும் விம்பம் வரையிலான சரியான கதிர் படத்திற்கும்
.....(01)

L_e ஐ கடந்து செல்லும் சமாந்தர கதிர்கள் கண்ணை அடையும் வரையான கதிர்களை வரைவதற்கு .....(01)

f_o யும் f_e குறிப்பதற்கு .....(01)

(அம்புக்குறி தலை குறிக்கப்படாவிடின் 01 புள்ளியை குறைக்க)

(iii) கதிர் படத்திலிருந்து $\alpha = \frac{h}{f_o}$ ——————— (2) உம்

$$\alpha' = \frac{h}{f_e} \text{ ——————— (3)}$$

ஏதாவது ஒரு சமன்பாட்டிற்கு .....(01)

சமன்பாடு (1) இல் பிரதியிட $m = \frac{f_o}{f_e}$ .....(01)

(*c*) (i)



$\alpha = 0.5° = 0.009$ rad

முதலாவது விம்பம் I_1, இற்கான சமன்பாடு (2) இல் பிரதியிட $0.009 = \frac{h_1}{100}$ .....(01)

$$h_1 = 0.9 \text{ cm}$$

கண் வில்லைக்கு (Fe) தெற்காட்டின் குறி வழக்கை உபயோகிக்க

$v = +25$ cm, $f = -10$ cm

வில்லைச் சூத்திரத்தை உபயோகிக்க $\frac{1}{v}-\frac{1}{u}=\frac{1}{f}$ .....(01)

$\frac{1}{+25}-\frac{1}{u}=\frac{1}{-10}$ .....(01)

(சரியான பிரதியிடலுக்கு)

$\frac{1}{u}=\frac{1}{25}+\frac{1}{10}=\frac{7}{50}$

இரண்டாவது விம்பம் I_2 ஐ கருதுக. $\alpha'=\frac{h_1}{u}$ .....(01)

$\alpha'=\frac{0.9\times7}{50}$ rad .....(01)

(பிரதியீட்டுக்கு)

$\alpha'=\frac{0.9\times7}{50}\times\frac{1^\circ}{0.018}$

$\alpha'=7^\circ(6.9^\circ-7^\circ)$ .....(01)

சமன்பாடு (1) இல் பிரதியிட கோணப் பெரிதாக்கம் (m) $m=\frac{7^\circ}{0.5^\circ}$ .....(01)

(பிரதியீட்டுக்கு)

$=14(13.8-14)$ .....(01)

(ii)



இரு புள்ளிக் கோடுகளை வரைவதன் மூலம் மெய் விம்பத்தின் நிலையைப் பெறல் .....(01)

L_e இன் வலபக்கம் குவியப்புள்ளி f_e ஐ குறித்தல் .....(01)

(iii) $v=-30$ cm, $f=-10$ cm

கண் வில்லைக்கு இச்சந்தர்ப்பத்தில் வில்லைச் சூத்திரத்தை பிரயோகிக்க $\frac{1}{v}-\frac{1}{u}=\frac{1}{f}$

$\frac{1}{-30}-\frac{1}{u}=\frac{1}{-10}$ .....(01)

(சரியான பிரதியீட்டுக்கு)

$$\frac{1}{u} = \frac{1}{10} - \frac{1}{30} = \frac{3-1}{30}$$

$$u = 15 \text{ cm}$$

கண் வில்லையின் நேர்கோட்டு உருப்பெருக்கம் $M = \frac{v}{u}$ .....(01)

$$M = \frac{30}{15} = 2$$

$h_1 = 0.9$ cm இலிருந்து மற்றும் $M = \frac{h_2}{h_1}$ .....(01)

$$h_2 = 2 \times 0.9$$

$$= 1.8 \text{ cm} \quad \text{.....(01)}$$

(iv) யேக்ஸ் தொலைக்காட்டியின் பொருள் வில்லைக்கு $\alpha = \frac{h}{f_o}$ ஐ பிரயோகிக்க

$$0.009 = \frac{h_1}{19.0} \quad \text{.....(01)}$$

$$h_1 = 17.1 \text{ cm}$$

முதலாவது விம்பத்தின் பருமனும் இரண்டாவது விம்பத்தின் பருமனும் சமனாக இருப்பதனால் அல்லது ஏகபரிமான பெரிதாக்கம் 1 ஆகும் அல்லது பொருள் தூரமும் விம்ப தூரமும் சமனானவை என அடையாளம் காணல்

.....(01)

எனவே விம்ப தூரம் = பொருள் தூரம் $= 2f_e$

அல்லது $-\frac{1}{30} - \frac{1}{30} = \frac{1}{f_e}$ .....(01)

$$2f_e = 30 \text{ cm}$$

$f_e = 15$ cm (0.15 m) .....(01)

சமன்பாடு (i) ஐ இலிருந்து கோணப் பெரிதாக்கம் $m = \frac{h_1}{0.3} \times \frac{19}{h_1} (OR \frac{19}{0.3})$ .....(01)

$m = 63 \ (OR \ 63.3)$ .....(01)

7. (*a*) ஒரு திரவியத்தின் யங்கின் மட்டு சமன்பாடு $\frac{F}{A}/\frac{e}{l}$ இனால் வரையறுக்கப்படுகின்றது; இங்கு எல்லாக் குறியீடுகளும் அவற்றின் வழக்கமான கருத்தைக் கொண்டுள்ளன. $\frac{F}{A}$, $\frac{e}{l}$ என்னும் பதங்களைப் பெயரிடுக.

(*b*) கராட்டே வீரர் ஒருவர் உரு (1) இற் காட்டப்பட்டுள்ளவாறு தனது குதியினால் பிரயோகிக்கப்படும் ஒரு தனி உதையினால் ஒரு மரப் பலகையை உடைப்பதற்கு முயலுகின்றார். அவர் அப்பலகையை உதைக்கும்போது பலகையை உடைக்காமல் அவருடைய குதி தொடக்கக் கதி $24\ m\ s^{-1}$ இலிருந்து 4·0 ms இல் ஓய்வுக்கு வருகின்றது. காலின் பலிதத் (பயன்படும்) திணிவு 16·0 kg ஆக இருக்கும் அதே வேளை காலெலும்பின் மிகச் சிறிய பகுதியில் பலித (பயன்படும்) குறுக்குவெட்டுப் பரப்பளவு $3\times10^{-4}\ m^2$ ஆகும். காலின் என்புத் திரவியம் ஓர் உயர்ந்தபட்ச நெருக்கு தகைப்பு $1·8\times10^{7}\ N\ m^{-2}$ ஐத் தாக்குப்பிடிக்கத்தக்கது. என்பு வழியே தகைப்பு சீராகப் பரம்பியுள்ளதெனக் கொள்க.



உரு (1)

(i) விளையாட்டு வீரரின் குதி $24\ m\ s^{-1}$ இலிருந்து ஓய்வுக்கு வரும்போது அவருடைய காலின் மீது தாக்கும் இடை விசையைத் துணிக.

(ii) காலின் என்பு மீது உள்ள உயர்ந்தபட்ச நெருக்கு தகைப்பு யாது?

(iii) என்பு முறிவதற்கான இயலுதகவு உள்ளதா? உங்கள் விடைக்குக் காரணங்களைத் தருக.

(*c*) மேலே (*b*) இற் குறிப்பிட்டவாறு காலினால் உதைக்கும் செயன்முறையில் கராட்டே விளையாட்டு வீரரின் கால் என்பு முறிகின்றது. அவர் முந்திய இயல்பு நிலைக்கு வரும் வரைக்கும் நடப்பதற்காக உரு (2) இற் காட்டப்பட்டுள்ளவாறு ஒரு தனிக் குழாயினாற் செய்யப்பட்ட ஊன்றுகோல்களைப் பயன்படுத்துகின்றார். அவருடைய திணிவு 90 kg ஆகும். அவருடைய நிறையின் அரைவாசி அவ்வூன்றுகோல்களினாலும் மற்றைய அரைவாசி அவருடைய மற்றைய காலினாலும் தாங்கப்படுகின்றன. அவர் நிற்கும்போது ஒவ்வோர் ஊன்றுகோலும் நிலைக்குத்துடன் 22° கோணத்தை ஆக்குகின்றன. ஒவ்வோர் ஊன்றுகோலும் $1\times10^{-2}\ m$ உள்ளாரையையும் $2\times10^{-2}\ m$ வெளியாரையையும் கொண்ட பொள்ளான அலுமினியக் குழாயைப் பயன்படுத்திச் செய்யப்பட்டுள்ளது. அலுமினியத்தின் யங்கின் மட்டு $7·0\times10^{10}\ N\ m^{-2}$ ஆகும்.



உரு (2)

(i) அவர் நழுவாமல் அசைவற்று நின்று கொள்வதற்கு ஓர் ஊன்றுகோலின் முனைக்கும் தரைக்குமிடையே உள்ள குறைந்தபட்ச நிலையியல் உராய்வுக் குணகம் யாதாக இருத்தல் வேண்டும்?
$\tan(22°) = 0·4$ என எடுத்துக் கொள்க.

(ii) ஒவ்வோர் ஊன்றுகோல் மீதும் தாக்கும் நெருக்கு விசையின் பருமனைத் துணிக.
$\cos(22°) = 0·9$ என எடுத்துக் கொள்க.

* கீழே (*c*) (iii), (*c*) (iv), (*d*) (ii) ஆகியவற்றுக்கான உங்கள் விடைகளை விஞ்ஞானக் குறிப்பீட்டில் இரு தசம தானங்களுக்கு மட்டந்தட்டுக. வினா 5 இற்கு முன்னால் தரப்பட்டுள்ள குறிப்பைப் பார்க்க.

(iii) ஓர் ஊன்றுகோல் மீது உள்ள நெருக்கு தகைப்பையும் நெருக்கு விகாரத்தையும் கணிக்க. $\pi = 3$ என எடுத்துக் கொள்க.

(iv) ஓர் ஊன்றுகோலின் நீளம் 125 cm எனின், ஓர் ஊன்றுகோலின் நீளத்தில் உள்ள மாற்றம் யாது?

(*d*) மேலே (*c*) இற் குறிப்பிட்ட ஊன்றுகோல்களுக்குப் பதிலாக இரு பொள்ளான ஒரேசக் குழாய்களைக் கொண்டு செய்யப்பட்ட ஊன்றுகோல்கள் அவ்விளையாட்டு வீரரினால் பயன்படுத்தப்படுகின்றனவெனக் கொள்க. அவ்வுருளை ஊன்றுகோலின் உட்குழாய் யங்கின் மட்டு E_1 ஐக் கொண்ட அலுமினியத்தினாலும் வெளிக் குழாய் யங்கின் மட்டு E_2 ஐக் கொண்ட கறையில்லா உருக்கினாலும் செய்யப்பட்டுள்ளன. அலுமினியக் குழாயினதும் கறையில்லா உருக்குக் குழாயினதும் குறுக்குவெட்டுப் பரப்பளவுகள் முறையே A_1, A_2 ஆகும். சேர்த்திக் குழாயின் குறுக்குவெட்டு உரு (3) இற் காட்டப்பட்டுள்ளது.



உரு (3)

(i) சேர்த்திக் குழாயின் பலித (பயன்படும்) யங்கின் மட்டு E ஆனது
$E = \frac{E_1A_1 + E_2A_2}{(A_1 + A_2)}$ இனால் தரப்படுமெனக் காட்டுக.

(ii) $E_1 = 8·0\times10^{10}\ N\ m^{-2}$, $A_1 = 10·0\times10^{-4}\ m^2$, $E_2 = 2·0\times10^{11}\ N\ m^{-2}$, $A_2 = 6·0\times10^{-4}\ m^2$ எனக் கொள்வோம். ஒவ்வோர் ஊன்றுகோலினதும் நீளம் 125 cm ஆகும். மேலே (*c*) (ii) இல் உள்ள விசை ஊன்றுகோலுக்குப் பிரயோகிக்கப்படும்போது சேர்த்திக் குழாயின் நீளத்தில் உள்ள மாற்றத்தைத் துணிக.

(*e*) பொதுவாக அலுமினிய ஊன்றுகோல்களின் கீழ் முனைகளில் இறப்பர் மூடிகள் பொருத்தப்பட்டிருக்கும். இறப்பர் மூடிகள் உள்ள இவ்வூன்றுகோல்களைப் பயன்படுத்தி ஒருவர் நடக்கும்போது அவருக்கு உள்ள அனுகூலங்களைப் பௌதிகவியற் கோட்பாடுகளைப் பயன்படுத்திக் குறிப்பிடுக.

7. (a) $\frac{F}{A}$ = தகைப்பு .....(01)

$\frac{e}{l}$ = விகாரம் .....(01)

(b) (i) $F = m(v-u)/t$ .....(01)

$F = 16 \times \left(\frac{24-0}{4\times10^{-3}}\right)$ (சரியான பிரதியீட்டுக்கு) .....(01)

$F = 9.6 \times 10^4$ N .....(01)

(ii) $\frac{F}{A} = \frac{9.6\times10^4}{3\times10^{-4}}$ (பிரதியீட்டுக்கு) .....(01)

$\frac{F}{A} = 3.2 \times 10^8$ N m^{-2} .....(01)

(iii) ஆம் (பிழையான பெறுமானத்திற்கு புள்ளி இல்லை) .....(01)

உயர்ந்த பட்ச நெருக்குத் தகைப்பு 1.8×10^7 N m^{-2} < 3.2×10^8 N m^{-2} .....(01)

(c)



(i) ஒரு ஜூவ்றுகோல் வழியேயான விசை F_1 எனில்

உறாப்பு விசை $F = F_1 \sin(22^0)$ .....(01)

செவ்வன் மறுதாக்க விசை $R = F_1 \cos(22^0)$ .....(01)

உராய்வுக் குணகம் $\mu = \frac{F}{R}$ ஆகையால் .....(01)

$\mu = \tan(22°)$

$\mu = 0.4$ .....(01)

(ii) ஒரு ஊர்ந்து கோல் மீதான செவ்வன் மறுதாக்கம் $F_1 \cos(22°) = \frac{900-450}{2}$

$F_1 = \frac{225}{\cos(22°)}$ அல்லது $\frac{225}{0.9}$ .....(01)

$F_1 = 250$ N (234 – 250 N) .....(01)

{மாற்று முறைகள்:

$R = \frac{900-450}{2} = 225\ \text{N}$; $F = \mu R = 0.4 \times 225 = 90\ \text{N}$

$F_1 = 225 \times \cos(22^0) + 90 \times \sin(22^0)$ ..... (01)

$= 225 \times \cos(22^0) + 90 \times \tan(22^0) \times \cos(22^0) = 225 \times 0.9 + 90 \times 0.4 \times 0.9$

$= 234.9\ \text{N}\ (235\ \text{N})$ .....(01)

அல்லது $F_1^2 = 225^2 + 90^2$ .....(01)

$= 242\ \text{N}$ .....(01) }

[இம்மாற்று முறைகளின் பிரகாரம் இறுதி விடைக்கு கூடிய வீச்சு வழங்கப்பட வேண்டியுள்ளது]

(iii) பலித பரப்பு $= \pi(2^2 - 1^2) \times 10^{-4}$ ..... (01)

நெருக்குத் தகைப்பு $= \frac{250}{\pi(2^2-1^2)\times10^{-4}}$ (பரப்பினால் பிரிப்பதற்கு) ..... (01)

$= \frac{250\times10^4}{3\times\pi}$

$= 2.78 \times 10^5\ \text{N m}^{-2}$ .....(01)

$(2.48 - 2.78) \times 10^5\ \text{N m}^{-2}$

நெருக்கு விகாரம் $= \frac{2.78\times10^5}{7.0\times10^{10}}$ (யங்கின் மட்டினால் பிரிப்பதற்கு) .....(01)

$= 3.97 \times 10^{-6}$ .....(01)

$(3.54 - 3.97) \times 10^{-6}$

(iv) ஒரு ஊன்று கோலின் நீளத்தில் உள்ள மாற்றம் $= 3.97 \times 10^{-6} \times 125 \times 10^{-2}$ .....(01)

(விகாரத்தை நீளத்தால் பெருக்குவதற்கு)

$= 4.96 \times 10^{-3}\ \text{mm}\ (4.96 \times 10^{-6}\ \text{m})$ .....(01)

$(4.42 - 4.96) \times 10^{-3}\ \text{mm}$

(d) (i) அலுமினிய மற்றும் கறையில்லா உருக்கு குழாய்களில் பிரயோகிக்கப்படும் விசைகள் F_1 உம் F_2 உம் எனின்,

மொத்த விசை $F_{\text{total}} = F_1 + F_2$ ..... (01)

$\frac{Ee(A_1+A_2)}{l} = \frac{E_1 e A_1}{l} + \frac{E_2 e A_2}{l}$ ..... (01)

$E = \frac{E_1A_1+E_2A_2}{(A_1+A_2)}$

(ii) சேர்த்திக் குழாயின் நீளத்தில் ஏற்படும் மாற்றம் e எனின்,

$$F = \frac{E_1A_1+E_2A_2}{(A_1+A_2)} \times e \times \frac{(A_1+A_2)}{l}$$

$$e = \frac{F \times l}{E_1A_1+E_2A_2}$$

$$e = \frac{250\times125\times10^{-2}}{8.0\times10^{10}\times10.0\times10^{-4}+20.0\times10^{10}\times6.0\times10^{-4}} \quad \text{.....(03)}$$

[$F \times l$ யை பிரதியிடுவதற்கு 01 புள்ளி ; E_1A_1 யை பிரதியிடுவதற்கு 01 புள்ளி ; E_2A_2 யை பிரதியிடுவதற்கு 01 புள்ளி]

$$e = 1.56 \times 10^{-3} \text{ mm } (1.56 \times 10^{-6} \text{ m}) \quad \text{.....(01)}$$

$(1.46\text{-}1.56)\times10^{-3}$mm

(e) மனிதனால் உணரப்பட்ட (அதிகபட்ச) விசை (தொடுகை நேரம் அதிகரிப்பினால்) குறைவாக இருக்கும் .

அல்லது மனிதனால் உணரப்பட்ட (அதிகபட்ச) கணத்தாக்கம் குறைவாக இருக்கும்

அல்லது இறப்பரின் மீள்தன்மை அழுத்த சக்தியாக சேமிக்கப்படும் சக்தியானது cushioning விளைவினை வழங்கும்

அல்லது நிலத்துடன் சிறந்த ஒட்டுதலை வழங்கும்

அல்லது உராய்வுக் குணகம் அதிகரிக்கின்றது / உராய்வு அதிகரிக்கின்றது அல்லது வழுக்குதலை குறைக்கின்றது

.....(02)

[இரு செல்லுபடியான காரணங்களுக்கு 02 புள்ளிகள்]

8. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து, கீழே கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக.

கருந் துளைகள் (Black holes) என்பவை அகிலத்தில் இருக்கும் மிகவும் விந்தையான பொருள்களாகும். அவற்றின் குறைந்தபட்சக் கனவளவில் அதிக அளவு சடப்பொருள் பொதியப்பட்டு இருப்பதனால் அவற்றின் ஈர்ப்புப் புலம் பலம் மிக்கதாகும். கருந் துளைகளிலிருந்து ஒளி எதுவும் வெளியேறு முடியாதாகையால் அவை கட்புலனாவதில்லை.

திணிவு M ஐயும் ஆரை R ஐயும் கொண்ட, சீரான அடர்த்தி உள்ள ஒரு கோளப் பொருளின் மேற்பரப்பிலிருந்து உள்ள தப்பல் வேகம் (v_e) ஆனது $\sqrt{\frac{2GM}{R}}$ இனால் தரப்படும்; இங்கு G ஆனது அகில ஈர்ப்பு மாறிலியாகும்.

தப்பல் வேகத்திற்கான இக்கோவையானது திணிவு M ஐ உடைய ஒரு பொருளின் ஆரை R ஒரு குறித்த அவதிப் பெறுமானத்திற்குக் குறைவாக அல்லது சமமாக இருப்பின், அப்பொருள் கருந் துளையாகத் தொழிற்படுமென தெரிவிக்கின்றது. இந்த அவதி ஆரை சுவார்ஸ்சைல்ட் ஆரை (Schwarzschild radius) R_s எனவும் ஒரு கருந் துளையைச் சூழ்ந்திருக்கும் இவ்வாரை உள்ள கோளத்தின் மேற்பரப்பு நிகழ்வு அடிவானம் (event horizon) எனவும் அழைக்கப்படும். இக்கோளத்தினூடாக ஒளி தப்பிச் செல்ல முடியாது ஆகையால், அதனுள்ளே நடைபெறும் நிகழ்வுகளை நாம் கண்டுபிடிக்க முடியாது.

ஒரு கருந் துளையிலிருந்து ஒளி தப்பிச் செல்ல முடியாவிட்டால், அத்தகைய பொருள்கள் இருப்பதை நாம் எங்ஙனம் அறியலாம்? ஒரு கருந் துளைக்கு அண்மையில் உள்ள வாயு அல்லது தூசி எதுவும் அதனைச் சுற்றிச் சுழன்று கருந் துளையினுள்ளே இழுத்துக் கொள்ளப்படும். ஒரு பம்பியில் உள்ள நெருக்கிய வளி சூடாவதைப் போன்று இத்தூசியும் / வாயுவும் சூடாக்கப்படும். தூசியின் / வாயுவின் வெப்பநிலை 10^6 K இற்கு மேற்பட்டதாக இருக்கும் அதே வேளை அது கட்புல ஒளியை மாத்திரமல்ல X-கதிர்களையும் காலலாம். ஒரு கருந் துளை இருப்பதை வெளிப்படுத்துவதற்கு வானியலாளர்கள் தூசியினால் / வாயுவினால் காலப்படும் X-கதிர்கள் நிகழ்வு அடிவானத்தைக் கடந்து செல்வதற்கு முன்பாக இருப்பதை அறிதல் வேண்டும்.

மிகவும் பாரிய மீத்திணிவுள்ள (supermassive) கருந் துளைகள் இருப்பதற்கும் பலமான சான்றுகள் உள்ளன. புவியிலிருந்து 26 000 ஒளியாண்டு தூரத்தில் தனுசு இராசியின் திசையில் எமது பால் வீதி வெள்ளுருத் தொகுதியின் மையத்தில் அத்தகைய ஒரு கருந் துளை இருப்பதாகக் காணப்பட்டுள்ளது. வான் பௌதிகவியலாளர்களினால் S4716 எனப் பெயரிடப்பட்டுள்ள ஓர் உடு இக்கருந் துளையைச் சுற்றிச் செல்வதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவ்வுடு இம்மீத்திணிவுள்ள கருந் துளையை நான்கு ஆண்டுகள் போன்ற ஒரு குறுகிய காலத்தினுள்ளே ஒரு தடவை சுற்றிச் செல்கின்றது. அதாவது இவ்வுடு இக்கருந் துளையைச் சுற்றி $8{\cdot}0\times10^6$ m s^{-1} என்னும் அதியுயர் கதியில் செல்கின்றது. இவ்வியக்கத்தைப் பகுப்பாய்வு செய்து கண்ணுக்குப் புலப்படாத மீத்திணிவுள்ள கருந் துளையின் திணிவை நாம் கணிக்கலாம்.

$G = 6{\cdot}0\times10^{-11}$ N m^2 kg^{-2} எனவும் ஒளியின் கதி $c = 3{\cdot}0\times10^8$ m s^{-1} எனவும் நீங்கள் எடுத்துக் கொள்ளலாம்.

(*a*) கருந் துளை என்பது யாது?

(*b*) (i) முதற் கோட்பாடுகளிலிருந்து தொடங்கித் தப்பல் வேகத்திற்கான கோவை $v_e = \sqrt{\frac{2GM}{R}}$ ஐப் பெறுக.

(ii) சீரான அடர்த்தி ρ ஐ உடைய ஒரு கோளப் பொருளுக்கு v_e ஆனது பொருளின் ஆரை R இற்கு நேரடி விகிதசமமெனக் காட்டுக.

(iii) மேலே (*b*) (i) இற் பெற்ற கோவையில் $v_e = c$ எனக் கொண்டு திணிவு M ஐ உடைய ஒரு கோளப் பொருளின் சுவார்ஸ்சைல்ட் ஆரை (R_s) இற்கான ஒரு கோவையை G, M, c ஆகியவற்றிற் பெறுக.

(*c*) நிகழ்வு அடிவானத்தை வரையறுப்பதன் காரணம் யாது?

(*d*) ஒரு கருந் துளை X-கதிர்களைக் கால முடியுமா? உங்கள் விடைக்குரிய காரணங்களைத் தருக.

(*e*) சுழன்றுகொண்டு கருந் துளையினுள்ளே இழுக்கப்படும் 10^6 K வெப்பநிலையில் இருக்கும் தூசியினால் / வாயுவினால் காலப்படும் கதிர்ப்பின் உச்ச அலைநீளம் (λ_m) ஐத் துணிக (வீனின் இடப்பெயர்ச்சி மாறிலி = 2900 μm K).

- கீழே (*f*) (i) இற்கும் (*f*) (ii) இற்குமான உங்கள் விடைகளை விஞ்ஞானக் குறிப்பீட்டில் முறையே இரு தசம தானங்களுக்கும் ஒரு தசம தானத்திற்கும் மட்டந்தட்டுக. வினா 5 இற்கு முன்னால் தரப்பட்டுள்ள குறிப்பைப் பார்க்க.

(*f*) உடு S4716 ஆனது மீத்திணிவுள்ள கருந் துளையைச் சுற்றி ஆரை r ஐ உடைய ஒரு வட்டப் பாதையிற் சுழல்கின்றதெனக் கொள்க. மேலும், உடுவும் மீத்திணிவுள்ள கருந் துளையும் சீரான அடர்த்தி உள்ள கோள வடிவத்தைக் கொண்டுள்ளன எனவும் கொள்க.

(i) பந்தியில் உள்ள தரவுகளைப் பயன்படுத்தி r இன் பெறுமானத்தைத் துணிக. ($\pi = 3$ என எடுத்துக் கொள்க.)

(ii) இதிலிருந்து, மீத்திணிவுள்ள கருந் துளையின் திணிவு M_B ஐக் கணிக்க.

(iii) மீத்திணிவுள்ள கருந் துளையின் சுவார்ஸ்சைல்ட் ஆரை R_s ஐக் கணிக்க.

(*g*) சூரியன் சடுதியாக இன்று கொண்டிருக்கும் அதே திணிவுடன் ஒரு கருந் துளையாக மாறுகின்றதெனக் கருதுகோள் முறையாகக் கருதுக.

(i) இதனால் புவி சூரியனைச் சுற்றி இன்றுள்ள அதே பாதையில் தொடர்ந்து சுழலுமா? உங்கள் விடைக்குரிய காரணங்களைத் தருக.

(ii) இதன் விளைவாகப் புவி மீதுள்ள உயிர் பாதிக்கப்படுமா? உங்கள் விடைக்குரிய முக்கிய காரணத்தைத் தருக.

(iii) 2·4 km ஆரையுள்ள கோளமாகச் சூரியனின் திணிவு சுருங்குமென்க. சூரியன் ஒரு கருந் துளையாக அமையுமெனக் காட்டுக. சூரியனின் திணிவு $1{\cdot}8\times10^{30}$ kg என எடுத்துக்கொள்க.

8. (a)

குறைந்த பட்சக் கனவளவில் ..... (01)

அதிகளவு சடப்பொருள் பொதியப்பட்ட ..... (01)

பொருள் கருந்துளையாகும்

(b) (i)தப்பல் பொருளின் திணிவு m என்க.

m திணிவின் இயக்க சக்தி $= \frac{1}{2}mv_e^2$ ..... (01)

m திணிவின் ஈர்ப்பு அழுத்த சக்தி $= -\frac{GMm}{R}$ ..... (01)

சக்திக் காப்பில் இருந்து,

$\frac{1}{2}mv_e^2 - \frac{GMm}{R} = 0$ (அல்லது வேறு ஏதாவது சரியான வடிவத்திற்கு) .....(01)

$v_e = \sqrt{\frac{2GM}{R}}$

(ii) $\rho = \frac{M}{\frac{4}{3}\pi R^3}$ ..... (01)

M இற்காகப் பிரதியிடல் $\Rightarrow$ $v_e = \sqrt{\frac{2G^4/_3\pi\rho R^3}{R}}$ ..... (01)

$v_e = \sqrt{\frac{8G\pi\rho}{3}}\, R$ ..... (01)

$\therefore v_e$ ஆனது பொருளின் ஆரை R இற்கு நேரடியாக விகித சமனாகும்.

(iii) $c = \sqrt{\frac{2GM}{R_S}}$ ..... (01)

$R_S = \frac{2GM}{c^2}$ ..... (01)

(c) உள்ளே நடைபெறும் நிகழ்வுகளை கண்டுபிடிக்க முடியாது. ..... (01)

(d) இல்லை ..... (01)

X – கதிர்கள் ஒளியைப் போல மின்காந்த அலைகளாகும் ..... (01)

(e) $\lambda_m T = \text{constant}$ அல்லது $\lambda_m T = 2900$ ..... (01)

$\lambda_m = \frac{2900}{10^6}$ (பிரதியீட்டுக்கு) ..... (01)

$\lambda_m = 2.9 \times 10^{-3}$ μm ..... (01)

(f) (i) $T = \frac{2\pi r}{v}$ ..... (01)

$4 \times 365 \times 24 \times 60 \times 60 = \frac{2 \times 3 \times r}{8.0 \times 10^6}$ (பிரதியீட்டுக்கு) ..... (01)

$r = 1.68 \times 10^{14}\,\text{m}$ $(1.680 - 1.682) \times 10^{14}\,\text{m}$ ..... (01)

(ii) உருவின் திணிவு m எனக்,

$\frac{GM_B m}{r^2} = \frac{mv^2}{r}$ ..... (01)

$M_B = \frac{v^2 r}{G}$ ..... (01)

$M_B = \frac{(8.0 \times 10^6)^2 \times 1.68 \times 10^{14}}{6.0 \times 10^{-11}}$ (பிரதியிடுவதற்கு) ..... (01)

$M_B = 1.8 \times 10^{38}\,\text{kg} (1.79 - 1.80) \times 10^{38}\,\text{kg}$ ..... (01)

(iii) $R_S = \frac{2GM}{c^2}$

$R_S = \frac{2 \times 6.0 \times 10^{-11} \times 1.8 \times 10^{38}}{9 \times 10^{16}}$ ..... (01)

(பிரதியிடுவதற்கு)

$R_S = 2.4 \times 10^{11}\,\text{m}$ ..... (01)

(g) (i) ஆம் $(2.38 - 2.40) \times 10^{11}\,\text{m}$ ..... (01)

ஒப்பு படத்தில் மாற்றம் ஏற்படாததால் / புவி விசையை அனுபவிப்பதனால் அல்லது
ஒரே கருந்துளையானது எமது சூரியனின் ஈர்ப்பைத் தவிர வேறு யாதேனும் ஈர்ப்பு இழுவைக்கு உட்படுவதில்லை.
..... (01)

(ii) ஆம் ..... (01)

புவியை வந்தடைவதற்கு ஒளி / வெப்பம் இல்லை ..... (01)

(iii) சூரியனுக்கான R_S வேறுமானம்

$R_S = \frac{2 \times 6.0 \times 10^{-11} \times 1.8 \times 10^{30}}{9 \times 10^{16}}$ ..... (01)

(பிரதியிடுக்கு)

$R_S = 2.4 \times 10^3\,\text{m}$ (2.4 km)

9. பகுதி (A) இற்கு அல்லது பகுதி (B) இற்கு மாத்திரம் விடை எழுதுக.

பகுதி (A)

(*a*) ஒரு மணித்தியாலத்தில் ஒரு கலத்திலிருந்து எடுத்துக் கொள்ளப்படத்தக்க உயர்ந்தபட்ச மாறா ஓட்டம் கலத்தின் கொள்ளளவு (capacity) என வரைறுக்கப்படும். அதன் அலகு அம்பியர் மணித்தியாலத்தினால் (Ah) தரப்படும். கொள்ளளவு 6 Ah வீதமும் மி.இ.வி 5·0 V வீதமும் உள்ள இரு சர்வசமக் கலங்கள் ஒரு பற்றரியை ஆக்குமாறு தொடுக்கப்பட்டுள்ளன.

இரு கலங்களும்

(i) தொடராக

(ii) சமாந்தரமாகத்

தொடுக்கப்படுமெனின், பற்றரியின் (Ah இலான) கொள்ளளவையும் (V இலான) மி.இ.வி. யையும் கணிக்க.

(*b*) ஒரு மின் மோட்டர்க் கார் பற்றரியைச் செய்வதற்கு ஒவ்வொன்றினதும் மி.இ.வி. 4·0 V ஆன 192 சர்வசமக் கலங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. எட்டுக் கலங்கள் உரு (1) இற் காட்டப்பட்டுள்ளவாறு ஒரு பற்றரி மொடியூலை ஆக்குமாறு தொடுக்கப்பட்டுள்ளன. அத்தகைய 24 மொடியூல்களைத் தொடராகத் தொடுத்து 24 kWh மின் மோட்டர்க் கார் பற்றரி ஆக்கப்படுகின்றது.



உரு (1) : பற்றரி மொடியூல்

(i) ஒரு பற்றரி மொடியூலின் (V இலான) மி.இ.வி. யையும் (Ah இலான) கொள்ளளவையும் கணிக்க. (1 kWh = 10^3 V Ah என நீங்கள் பயன்படுத்தலாம்.)

(ii) 24 kWh மின் மோட்டர்க் கார் பற்றரியின் (Ah இலான) கொள்ளளவையும் (V இலான) மி.இ.வி. யையும் கணிக்க.

(*c*) ஒரு கிடை வீதியில் மாறாக் கதி 36 km h^{-1} இற் செல்லும் மேற்குறித்த மின்மோட்டர்க் கார் அதன் இயக்கத்திற்கெதிரே ஒரு 480 N மொத்தத் தடை விசையை அனுபவிக்கின்றது. காரின் வளிச்சீராக்கியின் (A/C) வலு நுகர்ச்சி 1·2 kW ஆகும். கார் அதன்

(i) முழுப் பயணத்திற்கும் வளிச்சீராக்கி (A/C) தொழிற்படும்போது (முழுப் பயணத்திற்கும் வளிச்சீராக்கியின் வலு நுகர்ச்சி மாறாதிருக்கின்றது எனக் கொள்க)

(ii) முழுப் பயணத்திற்கும் வளிச்சீராக்கி (A/C) தொழிற்படாமல் இருக்கும்போது பற்றரியில் முற்றாகத் தேக்கி வைக்கப்பட்டிருக்கும் (kWh இலான) சக்தியில் 50% ஐ மாத்திரம் நுகர்ந்து கொண்டு செல்லத்தக்க உயர்ந்தபட்சத் தூரத்தைக் கணிக்க.

(*d*) மேற்குறித்த மோட்டர்க் காரின் உள்ளகத்தை வெப்பமாக்குவதற்குப் பயன்படுத்தப்படும் மின் சுற்று உரு (2) இற் காட்டப்பட்டுள்ளது. குளிரான வானிலையின்போது காரின் உள்ளகத்தை வெப்பமாக்க வேண்டியபோது சாரதி ஓர் ஆளியைப் பயன்படுத்தி தடையி R_1 அல்லது தடையி R_2 ($R_1 < R_2$) இனூடாக ஓர் ஓட்டத்தைச் செல்லச் செய்யலாம். R_1, R_2 ஆகிய தடையிகளினூடாகச் செல்லும் ஓட்டம் வலுவை விரயமாக்கி உள்ளகத்தை வெப்பமாக்குகின்றது. ஆகவே தடையிகள் வெப்பமாக்கிகளாகத் தொழிற்படுகின்றன. காலப்போக்கில் பற்றரியில் அகத் தடை உண்டாகின்றதெனக் கருதுக. அகத் தடை 10 Ω ஐக் கொண்ட ஓர் அம்பியர்மானியும் ஓர் இலட்சிய வோல்ற்றுமானியும் சுற்றைச் சோதிப்பதற்குத் தொடுக்கப்பட்டுள்ளன.



உரு (2)

(i) சாரதி OP ஐ அல்லது OQ ஐத் தொடுப்பதன் மூலம் சுற்றைப் பூரணப்படுத்தலாம். குறைந்த வலு விரய வீதத்தையும் உயர்ந்த வலு விரய வீதத்தையும் பெறுவதற்கு உகந்த தொடுப்புகளை இனங்கண்டு எழுதுக. உதாரணமாகத் தொடுப்பு OX ஐச் செய்யும்போது வெப்பமாக்கியினூடாக ஓட்டம் செல்லாத அதே வேளை சுற்றிலிருந்து R_1 உம் R_2 உம் தொடுப்பகற்றப்படும்.

(ii) வெப்பமாக்கிகள் தொழிற்படாமல் இருக்கும்போது வோல்ற்றுமானி வாசிப்பு 255 V ஆகும். சுற்றானது R_1 உடன் தொடுக்கும்போது வோல்ற்றுமானி வாசிப்பு 250 V இற்கு விழும் அதே வேளை அம்பியர்மானி வாசிப்பு 5·0 A ஆகும். பற்றரியின் மின்னியக்க விசை, பற்றரியின் அகத் தடை, தடையி R_1 இன் தடைப் பெறுமானம் ஆகியவற்றைக் கணிக்க.

(iii) மேலே (*d*) (ii) இற் குறிப்பிட்ட வலு வகையில் தொழிற்படும்போது வெப்பமாக்கியின் வலு விரயத்தைக் கணிக்க.

9. (*a*) (i) தொடர் சேர்மானத்தில் மின்னோட்டம் மாறாது.

எனவே கொள்ளளவு = 6 Ah ..... (01)

மின் இயக்க விசைகள் கூட்டப்படுகின்றது ..... (01)

எனவே மின் இயக்க விசை = 5.0 + 5.0

= 10.0 V .....(01)

(ii) சமாந்தர சேர்மானத்தில் மின்னோட்டங்கள் கூட்டப்படுகின்றது. ..... (01)

எனவே கொள்ளளவு = 6 + 6

= 12 Ah ..... (01)

மின் இயக்க விசைகளில் மாற்றம் இல்லை

எனவே மி.இ.வி = 5.0 V ..... (01)

(*b*) (i) மி.இ.வி = 4.0 × 4

= 16.0 V ..... (01)

முழு பற்றரியினால் (தொடரிலுள்ள 24 மொடியூல்கள்) சேமிக்கப்பட்ட சக்தி = 24 kWh

ஒரு மொடியூலில் சேமிக்கப்பட்ட சக்தி = 24 /24 ..... (01)

= 1 kWh

ஒரு மொடியூலின் கொள்ளளவு = 1000 /16

= 62.5 Ah ..... (01)

(ii) ஒரு பற்றரியின் கொள்ளளவு = ஒரு தனி மொடியூலின் கொள்ளளவு

= 62.5 Ah ..... (01)

முழு பற்றரியின் மி.இ.வி. = 24000 /62.5

= 384 V .....(01)

{மாற்று முறை

முழு பற்றரியின் மி.இ.வி. = 16 × 24

= 384 V ..... (01)}

(c) (i) உபயோகிக்கப்படத்தக்க சக்தி = 24 × 50% (50% இனால் பெருக்குவதற்கு) ..... (01)

= 12 kWh

காரின் கதி = 36 km h^{-1} = 10 m s^{-1} (km h^{-1} ஐ m s^{-1} ஆக மாற்றுதல்) .....(01)

1 மணித்தியாலயத்தில் மொத்த வலு நுகர்ச்சி 1 hr = 10 × 480 + 1200 (கூட்டலுக்கு) ..... (01)

= 6 kW

முழுப் பயண நேரம் = 12 / 6 (வகுத்தலுக்கு) ..... (01)

= 2 hr

வீச்சு = 36 × 2

= 72 km (அல்லது 72000 m) ..... (01)

(ii) 1 மணித்தியாலயத்துக்கான வலு = 10 × 480 = 4.8 kW

குறைந்த வலு விரயத்துக்கு = 12 / 4.8 (வகுத்தலுக்கு) ..... (01)

= 2.5 hr

வீச்சு = 36 × 2.5

= 90 km (அல்லது 90000 m) ..... (01)

(d) (i) உயர் வலு விரயத்துக்கு – QP ..... (01)

குறைந்த வலு விரயத்துக்கு – OQ ..... (01)

(ii) மி.இ.வி. = 255 V ..... (01)

பற்றரியின் அகத்தடை r என்க. எனவே கிர்கோப்பின் விதியை பிரயோகித்தால்

$255 - 5 \times r = 250$ ..... (02)

(L.H.S. இற்கு 01 புள்ளி ; L.H.S ஐ 250 இற்கு சமப்படுத்த 01 புள்ளி)

$r = 1\ \Omega$ ..... (01)

$250 - 5R_1 - 5 \times 10 = 0$ ..... (02)

(கலம் $5R_1$ ஐ எழுத 01 புள்ளி ; சமன்பாட்டின் மிகுதிக்கு 01 புள்ளி)

$R_1 = 40\ \Omega$ ..... (01)

(iii)

$P = I^2R_1$ ..... (01)

$= 5 \times 5 \times 40$ (பிரதியீட்டுக்கு) ..... (01)

= 1 kW (1000 W) ..... (01)

பகுதி (B)

(*a*) உரு (1) இற் காட்டப்பட்ட சுற்று ஒரு சேனர் இருவாயியையும் ஒரு திரான்சிஸ்ரர் ஒழுங்கமைப்பையும் பயன்படுத்தி ஒரு மாறும் பெய்ப்பு வோல்ற்றளவு V_{in} இலிருந்து ஓர் உகந்த பயப்பு V_{out} ஐப் பெறுவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. குறைந்தபட்ச ஓட்டம் 10 mA ஆன ஒரு சேனர் இருவாயியும் ஒரு சிலிக்கன் திரான்சிஸ்ரரும் சுற்றில் பயன்படுத்தப்பட்டுள்ளன. தடை $R_S = 70\,\Omega$, சுமைத் தடை $R_L = 90\,\Omega$, சேனர் வோல்ற்றளவு $V_Z = 8{\cdot}3\,V$ எனக் கொள்வோம். $V_{in} = 23\,V$ எனக் கொள்க.

பின்வருவனவற்றைக் கணிக்க.

(i) V_{out} ($V_{BE} = 0.7\,V$ என எடுத்துக் கொள்க)

(ii) ஓட்டம் I_L

(iii) ஓட்டம் I_S

(iv) குறைந்தபட்சச் சேனர் ஓட்டத்தை ஒத்த I_C



உரு (1)

(*b*) மேலே உரு (1) இல் உள்ள சுற்று ஒரு மாறா V_{out} பெறுமானத்தைப் பேணுவதற்குப் பெய்ப்பில் ஒரு வோல்ற்றளவு மாறலை ஒழுங்காக்கலாம்.

(i) $V_{in} = 23\,V$ ஆகவும் $30\,V$ ஆகவும் இருக்கும்போது R_S தடையிற்குக் குறுக்கே விரயமாகும் வலுவின் அளவைக் கணிக்க.

(ii) மேலே (*b*) (i) இல் உள்ள உங்கள் கணிப்புகளைப் பயன்படுத்திச் சுற்று பெய்ப்பு வோல்ற்றளவில் ஒரு மாற்றத்தை ஒழுங்காக்கும் விதத்தைச் சுருக்கமாக விளக்குக.

(*c*) மேலே உரு (1) இல் உள்ள சுற்று பயப்புச் சுமைத் தடையில் உள்ள அதிகரிப்புக் காரணமாக V_{out} இல் ஒரு வோல்ற்றளவு மாறலையும் ஒழுங்காக்கலாம்.

(i) சுமைத் தடை அதிகரித்தால், சேனர் ஓட்டம் I_Z இற்கும் I_C இற்கும் என்ன நடைபெறும்? உங்கள் விடையை விளக்குக.

(ii) சுமைத் தடை அதிகரிக்கும்போது சேனர் இருவாயி–திரான்சிஸ்ரர்ச் சேர்மானத்தின் மூலம் பயப்பு வோல்ற்றளவு ஒழுங்காக்கப்படும் விதத்தைச் சுருக்கமாக விளக்குக.

(*d*) பின்வரும் உரு (2) இற் காட்டப்பட்டுள்ள சுற்று 15 V வலுக்கும் பிரயோகத்தக்க ஓர் அகத் தடை (r) உள்ள ஒரு சூரியப் படலின் மூலம் ஒரு பற்றரியை ஏற்றுவதற்குப் (charge) பயன்படுத்தப்படுகின்றது. சுற்றின் பயப்பு வோல்ற்றளவு 14 V ஐ விஞ்சுகின்றதாகும்.



உரு (2)

(i) தரப்பட்டுள்ள தெரிவுகளிலிருந்து (நேர்மாற்றும் விரியலாக்கி, நேர்மாற்றாத விரியலாக்கி, ஒப்பாளி) மேற்குறித்த சுற்றில் உள்ள செயற்பாட்டு விரியலாக்கியின் செயற்பாட்டு வகையை எழுதுக.

(ii) பிரகாசமான சூரிய ஒளியில் பயப்பு வோல்ற்றளவு 14 V ஐ உண்டாக்குமாறு R_2 செப்பஞ்செய்யப்படுகின்றது. $R_1 = 9\,k\Omega$ ஆகவும் $R_2 = 5\,k\Omega$ ஆகவும் இருக்கும்போது செயற்பாட்டு விரியலாக்கியின் பயப்பு நேராக நிரம்பியிருப்பதற்குச் சேனர் இருவாயி Z_1 இற்கு இருக்க வேண்டிய பிரகவும் உகந்த உயர்ந்தபட்ச வோல்ற்றளவு V_{Z_1} ஐக் கணிக்க.

(iii) நேர்மாற்றாப் பெய்ப்புக்கும் நேர்மாற்றும் பெய்ப்புக்குமிடையே 100 μV வோல்ற்றளவு வித்தியாசத்திற்குச் செயற்பாட்டு விரியலாக்கியின் பயப்பு நிரம்பலடையுமெனின், சுற்றின் பயப்பு வோல்ற்றளவு 14 V ஆக இருக்கும்போது செயற்பாட்டு விரியலாக்கியின் திறந்த தட வோல்ற்றளவு நயத்தைக் கணிக்க. செயற்பாட்டு விரியலாக்கியின் பயப்பு நிரம்பல் வோல்ற்றளவு வழங்கல் வோல்ற்றளவிற்கு 2 V கீழே உள்ளதெனக் கொள்க.

(iv) நவீந்த சூரியஒளியில் சூரியப் படல் 14 V இலும் குறைந்த வோல்ற்றளவைப் பிறப்பிக்கும்போது இச்சுற்றில் உள்ள செயற்பாட்டு விரியலாக்கியினதும் திரான்சிஸ்ரரினதும் தொழிற்பாட்டைச் சுருக்கமாக விளக்குக.

(a)(i) $V_{out} = V_z + V_{BE}$ ..... (01)

$= 8.3 + 0.7$ (கூட்டலுக்கு) ..... (01)

$V_{out} = 9\ V$ ..... (01)

(ii) $I_L = V_{out} / R_L$ ..... (01)

$I_L = 9 / 90$ (வகுத்தலுக்கு) ..... (01)

$I_L = 0.1\ A$ ..... (01)

(iii) $I_S = (V_{in} - V_{out}) / R_S$ ..... (01)

$I_S = (23 - 9)/70$ (வகுத்தலுக்கு) ..... (01)

$I_S = 0.2\ A$ ..... (01)

(iv) $I_S = I_Z + I_C + I_L$ ..... (01)

$I_C = I_S - I_L - I_Z$

$I_C = 0.2 - 0.1 - 0.01$ (கழித்தலுக்கு) ..... (01)

$I_C = 0.09\ A$ ..... (01)

(b) (i) $P = V^2/R$ (அல்லது I^2R)

$P = 2.8\ W$ ..... (01)

$P = 6.3\ W$ ..... (01)

(ii) சேனர் மற்றும் திரான்சிஸ்டருக்கு குறுக்கே பயப்பு அழுத்தம் மாறினால் ..... (01)

பெய்ப்பு அழுத்தம் மாறும் பொழுது தடை R_S இடையான மேலதிக வலு (வெப்பமாக) விரயமாகும். ..... (01)

(c) (i) $I_S = I_Z + I_C + I_L$

சுமைத்தடை அதிகரிக்குமாயின் சுமை மின்னோட்டம் குறைகிறது.

எனவே, I_Z அதிகரிக்க வேண்டும் ..... (01)

I_Z இனுடைய அதிகரிப்பு திரான்சிஸ்டரினூடு மேலதிக அளவு மின்னோட்டத்தை செல்ல அனுமதிக்கிறது.

எனவே, I_C அதிகரிக்கும். ..... (01)

(ii) சேனர் மற்றும் திரான்சிஸ்டர்களுக்கு குறுக்கே பயப்பு அழுத்தம் மாறலி

Is ஐ மாறாது பேணிக் கொண்டு சுமைத்தடையை அதிகரிக்கும் பொழுது திரான்சிஸ்டரினூடு அதிக மின்னோட்டத்தை அனுமதிப்பதற்காக Iz அதிகரிக்கின்றது.

மாறா பயப்பு அழுத்தத்தை வழங்குவதற்காக திரான்சிஸ்டரினூடு மேலதிக வலு விரயமாக்கப்படுகின்றது. ..... (01)

(d)

(i) ஒப்பாளி ..... (02)

(ii) $V_+ = V_{max} \times [R_2 / (R_1 + R_2)]$

$= 14 \times 5/(5+9)$ (பிரதியீட்டுக்கு) ..... (01)

$V_z = 5\ V$ ..... (01)

(iii) $A = V_{out}/(V_+ - V_-)$ ..... (01)

$A = (14-2)/(100 \times 10^{-6})$ ..... (01)

$A = 120,000$ ..... (01)

(iv) நலிந்த ஒளியின் பொழுது செயற்பாட்டு விரியலாக்கியின் நேர் முடிவிடத்துக்கு அழுத்தம் 5 V இற்கு கீழே குறைகின்றது. ..... (01)

இதன் காரணமாக செயற்பாட்டு விரியலாக்கியின் பயப்பு ஆகிய டூச்சிய வோல்ற்றிற்கு செல்கிறது. ..... (01)

இதனால் திரான்சிஸ்டர் துண்டிப்பு நிலைக்கு (திரான்சிஸ்டர் செயற்படவில்லை) செல்கிறது ..... (01)

எனவே குறிய படலைக்கு குறுக்கே காணப்படும் அழுத்தமானது பற்றரிக்கு குறுக்கேயான அழுத்தத்திற்கு ஒத்ததாக இருக்கும். ..... (01)

10. பகுதி (A) இற்கு அல்லது பகுதி (B) இற்கு மாத்திரம் விடை எழுதுக.

பகுதி (A)

(*a*) பயன்படுத்தப்படும் குறியீடுகளைத் தெளிவாக இனங்கண்டு ஒரு திரவத்தின் கனவளவு விரிகைத்திறன் (γ) இற்கான ஒரு கோவையை எழுதுக.

(*b*) ஒரு குறித்த தினத்தில் நுவரெலியாவில் உள்ள ஓர் எரிபொருள் நிரப்பு நிலையத்தின் தாங்கியில் இருக்கும் பெற்றோலின் வெப்பநிலை காலையில் 7 °C உம் பிற்பகலில் 27 °C உம் ஆகும். பெற்றோலின் சராசரிக் கனவளவு விரிகைத்திறன் $9{\cdot}6\times10^{-4}\,°C^{-1}$ உம் 7 °C இல் பெற்றோலின் அடர்த்தி $730\ kg\ m^{-3}$ உம் ஆகும். இந்த எரிபொருள் நிரப்பு நிலையத்திலிருந்து ஒரு காருக்கு 20 லீற்றர் பெற்றோல் நிரப்பப்படவுள்ளது.

(i) 7 °C இல் 20 லீற்றர் பெற்றோலின் திணிவு யாது? ($1\ m^3 = 1000$ லீற்றர்)

(ii) 7 °C இல் உள்ள $1\ m^3$ பெற்றோலின் வெப்பநிலை 27 °C இற்கு அதிகரிப்பின், அதன் புதிய கனவளவைக் கணிக்க. (உங்கள் விடையை m^3 இல் முன்று தசம தானங்களுக்கு மட்டந்தட்டுக.)

(iii) 27 °C இல் உள்ள பெற்றோலின் அடர்த்தி யாது? $\left[\frac{7{\cdot}3}{1{\cdot}019} = 7{\cdot}164\right.$ எனக் கொள்க. உங்கள் விடையை $kg\ m^{-3}$ இற் கிட்டிய முழுவெண்ணிற்குத் தருக.$]$

(iv) 27 °C இல் உள்ள 20 லீற்றர் பெற்றோலின் திணிவைக் கணிக்க.

(v) எரிபொருள் நிரப்பு நிலையத்தில் 7 °C இல் உள்ள 20 லீற்றர் பெற்றோல் நிரப்பப்பட்டால் 27 °C இலும் பார்க்க மேலதிகமாக எத்தனை கிலோகிராம் பெற்றோல் காருக்குக் கிடைக்கும்?

(*c*) ஒரு பெற்றோல் பௌசரின் தாங்கி ஓர் உலோகத்தினாற் செய்யப்பட்டிருக்கும் அதே வேளை 7 °C இல் தாங்கியின் உட்கனவளவு 25 000 லீற்றர் ஆகும். ஒரு வெப்பமான நாளில் பெற்றோலினதும் தாங்கியினதும் வெப்பநிலை 27 °C ஆக அமைந்து விரிவு காரணமாகத் தாங்கியில் முற்றாகப் பெற்றோல் நிரம்பியது. பெற்றோலின் சராசரிக் கனவளவு விரிகைத்திறன் $9{\cdot}6\times10^{-4}\,°C^{-1}$ உம் உலோகத்தின் ஏகபரிமாண விரிகைத்திறன் $2{\cdot}4\times10^{-5}\,°C^{-1}$ உம் ஆகும்.

* கீழே (*c*) (i), (*c*) (iii), (*c*) (iv) ஆகியவற்றுக்கான உங்கள் விடைகளை விஞ்ஞானக் குறிப்பீட்டில் இரு தசம தானங்களுக்கு மட்டந்தட்டுக. வினா **5** இற்கு முன்னால் தரப்பட்டுள்ள குறிப்பைப் பார்க்க.

(i) தாங்கியில் உள்ள பெற்றோலின் தோற்றக் கனவளவு விரிகைத்திறனைக் காண்க.

(ii) இதிலிருந்து 7 °C இல் உள்ள பெற்றோலின் கனவளவை (லீற்றரில்) கணிக்க. $\left[\frac{1}{1+1{\cdot}776\times10^{-2}} = 0{\cdot}98\right.$ என எடுத்துக் கொள்க.$]$

(iii) வெப்பநிலையை 7 °C இலிருந்து 27 °C இற்கு அதிகரிக்கச் செய்வதற்குச் சூழலிலிருந்து தாங்கியினாலும் பெற்றோலினாலும் எவ்வளவு வெப்பம் உறிஞ்சப்படும்? உலோகத்தினதும் பெற்றோலினதும் தன்வெப்பக் கொள்ளளவுகள் முறையே $5{\cdot}0\times10^{2}\ J\ kg^{-1}\ K^{-1}$, $2{\cdot}2\times10^{3}\ J\ kg^{-1}\ K^{-1}$ ஆகும். வெற்றுத் தாங்கியின் உலோகத்தின் திணிவு $2{\cdot}0\times10^{3}\ kg$ ஆகும்.

(iv) 7 °C இல் தாங்கியின் அரைவாசியில் பெற்றோலும் எஞ்சிய பகுதியில் $1{\cdot}0\times10^{5}\ Pa$ வளிமண்டல அமுக்கத்தில் உள்ள வளியும் இடப்பட்டுத் தாங்கி அடைக்கப்படுகின்றதெனக் கொள்வோம். 27 °C இல் தாங்கியினுள்ளே இருக்கும் மொத்த அமுக்கத்தைத் துணிக. 27 °C இல் பெற்றோலின் நிரம்பிய ஆவியமுக்கம் $7{\cdot}47\times10^{4}\ Pa$ ஆகும். இக்கணிப்புக்கு உலோகத்தினதும் பெற்றோலினதும் கனவளவு விரிவைப் புறக்கணிக்க.

(v) மேலே சந்தர்ப்பம் (*c*) (iv) இல் 27 °C இல் பௌசரினுள்ளே பெற்றோல் ஆவியின் எத்தனை மூல்கள் இருக்கும்? அகில வாயு மாறிலி $R = 8{\cdot}3\ J\ mol^{-1}\ K^{-1}$. பெற்றோல் ஆவி ஓர் இலட்சிய வாயுவாக நடந்து கொள்கின்றது எனக் கொள்க.

10A

(a) $\gamma = \frac{V_2 - V_1}{V_1(\theta_2 - \theta_1)}$ .....(01)

θ_1 வெப்பநிலையின் கனவளவு V_1 உம் θ_2 வெப்பநிலையின் கனவளவு V_2 உம் ஆகும் ..... (01)

(b) (i) 20 l பெற்றோலின் திணிவு $= 20 \times 10^{-3} \times 730$ ..... (01)

$= 14.6\ \text{kg}$ ..... (01)

(ii) $V_{27} = V_7[1 + \gamma(27 - 7)]$ ..... (01)

$V_{27} = 1[1 + 9.6 \times 10^{-4} \times 20]$ ..... (01)

$V_{27} = 1.019\ \text{m}^3$ ..... (01)

(iii) 27 °C இல் பெற்றோலின் அடர்த்தி $= \frac{1 \times 730}{1.019}$ (பிரதியீட்டுக்கு) ..... (01)

{மாற்று முறை : $\rho_{27} = \frac{\rho_7}{1+\gamma(27-7)}$

$= \frac{730}{1+9.6\times10^{-4}\times20}$ .....(01)}

$= 716\ \text{kg m}^{-3}$ ..... (01)

(iv) 27 °C யில் 20 l பெற்றோலின் திணிவு $= 716 \times 20 \times 10^{-3}$ (பிரதியீட்டுக்கு) ..... (01)

$= 14.3\ \text{kg}\ (14.32\ \text{kg})$ ..... (01)

(v) மேலதிக திணிவு $= 14.6 - 14.3\ (14.32)$ (பிரதியீட்டுக்கு) ..... (01)

$= 0.3\ \text{kg}$ (அல்லது $0.28\ \text{kg}$) ..... (01)

(c) (i) $\gamma_r = \gamma_a + 3\alpha$ ..... (01)

தோற்றக் கனவளவு விரிகைத் திறன் $= 9.60 \times 10^{-4} - 3 \times 2.4 \times 10^{-5}$ ..... (01)
(பிரதியீட்டுக்கு)

$= 8.88 \times 10^{-4}\ ^\circ\text{C}^{-1}$ ..... (01)

(ii) $V_{27} = V_7[1 + 8.88 \times 10^{-4} \times (27 - 7)]$ ..... (01)

$25{,}000 = V_7[1 + 1.776 \times 10^{-2}]$

$V_7 = \frac{25{,}000}{1+1.776\times10^{-2}}$ ..... (01)

$V_7 = 24{,}500$ litres ..... (01)

(iii) $Q = mc\Delta\theta$ ..... (01)

$Q = (mc\Delta\theta)_{\text{petrol}} + (m'c'\Delta\theta)_{\text{metal}}$

$Q = 24.5 \times 730 \times 2.2 \times 10^3 \times (27 - 7) + 2 \times 10^3 \times 5 \times 10^2 \times (27 - 7)$ ..... (02)

இவ்வொரு பிரதியீட்டுக்கும் 01 புள்ளி

$= 8.07 \times 10^8$ J ..... (01)

$(8.00 - 8.07) \times 10^8$ J

(iv) 27°C யில் வளி அமுக்கம் P_{27air}

$\frac{1.0\times10^5}{273+7} = \frac{P_{27air}}{273+27}$ ..... (01)

$P_{27air} = 1.07 \times 10^5$ Pa

மொத்த அமுக்கம் $= P_{27gas} + P_{27air}$ ..... (01)

$= 7.47 \times 10^4 + 1.07 \times 10^5$ (கூட்டலுக்கு) ..... (01)

$P_{27\,total} = 1.82 \times 10^5$ Pa ..... (01)

$(1.81 - 1.82) \times 10^5$ Pa

(v) $PV = nRT$ பெற்றோல் ஆவிக்கு ..... (01)

$n_{\text{vapour}} = \frac{7.47\times10^4\times12.5}{8.3\times(273+27)}$ (பிரதியீட்டுக்கு) ..... (01)

$n_{\text{vapour}} = 375$ mol ..... (01)

பகுதி (B)

ஊட்டுமானி (Dosimeter) என்பது அயனாக்கக் கதிர்ப்பு வெளிதரலை (exposure) அளப்பதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணமாகும். அது மனித உடலுக்கு வெளிதரப்படும் கதிர்ப்பின் அளவை அளப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. இது காப்புக்கு அத்தியாவசியமான ஒரு நடவடிக்கையாகும். இரு வகை ஊட்டுமானிகள் உள்ளன. அவை உயிர்ப்புள்ள (active) ஊட்டுமானியும் உயிர்ப்பற்ற (passive) ஊட்டுமானியும் ஆகும். ஓர் உயிர்ப்பான ஊட்டுமானியின் மூலம் அச்சந்தர்ப்பத்தில் உள்ள வெளிதரலைப் பெறலாம். உயிர்ப்பற்ற ஊட்டுமானி ஒரு நிச்சயமான காலத்தில் ஒருவர் உறிஞ்சும் கதிர்ப்பின் அளவை அளக்கின்றது. மிகப் பொதுவாகப் பயன்படுத்தப்படும் உயிர்ப்பற்ற ஊட்டுமானி வெப்பொளிர்வு ஊட்டுமானி (Thermoluminescent dosimeter - TLD) ஆகும்.

ஒரு வெப்பொளிர்வுப் பளிங்கு அயனாக்கும் கதிர்ப்புக்கு வெளிதரப்படும்போது அக்கதிர்ப்புச் சக்தி உறிஞ்சப்பட்டு அதன் பளிங்குச் சாலகத்தில் வைத்துக்கொள்ளப்படும். பளிங்கு வெப்பமாக்கப்படும்போது அதில் வைத்திருக்கப்படும் சக்தி கட்புல ஒளியாக விடுவிக்கப்படும். அவ்வொளியின் செறிவானது பளிங்கிற்கு வெளிதரப்பட்ட அயனாக்கக் கதிர்ப்பின் செறிவுக்கு விகிதசமனாகும். காலப்பட்ட ஒளி ஓர் ஒளியுணர் மேற்பரப்பில் படுமாறு விடப்படும். அதே வேளை அதன் மூலம் ஒரு நலிந்த ஓட்டம் உண்டாக்கப்படும். இறுதியாக இந்த ஓட்டம் விரியவாக்கப்பட்டு அளக்கப்படும்.

கைகர் - மியூலர் எண்ணியைப் (Geiger-Müller counter) பயன்படுத்தி அயனாக்கக் கதிர்ப்பை உணரலாம். வெவ்வேறு திரவியங்களினால் ஆக்கப்பட்ட, பல்வேறு தடிப்புகளைக் கொண்ட உறிஞ்சித் தட்டுகளைப் (absorber plates) பயன்படுத்தி ஒரு கைகர் - மியூலர் எண்ணி மீது படும் அயனாக்கக் கதிர்ப்பின் வகையைத் துணியலாம்.

(a) வளியை அயனாக்கத்தக்க கதிர்ப்புகளின் மூன்று வகைகளை எழுதுக.

(b) உயிர்ப்பற்ற ஊட்டுமானிக்கு மேலாக உயிர்ப்புள்ள ஊட்டுமானியின் ஓர் அனுகூலத்தை எழுதுக.

(c) அரை ஆயுட்காலம் 1 மணித்தியாலமாக உள்ள ஒரு கதிரத்தொழிற்பாட்டுத் திரவியத்தின் தொழிற்பாடு ஒரு கைகர் - மியூலர் எண்ணியினால் அளக்கப்படுகின்றது. தொடக்க எண்ணல் வீதம் 64 எண்ணல்கள் / செக்கன் எனின், 3 மணித்தியாலங்களுக்குப் பின்னர் எண்ணல் வீதத்தைக் கணிக்க.

(d) வெவ்வேறு உறிஞ்சித் தட்டுகளைப் பயன்படுத்தி ஒரு கைகர் - மியூலர் எண்ணி மீது படும் அயனாக்கக் கதிர்ப்பின் வகையை உணருதல் எவ்வாறு சாத்தியமாகும்?

(e) ஒரு TLD ஊட்டுமானியானது 198 nW செறிவைக் கொண்ட அலை நீளம் 400 nm உள்ள நீல ஒளியைக் காலுகின்றது. காலப்பட்ட ஒளி வேலைச் சார்பு 2·0 eV உள்ள சீசியத்தினாலான ஓர் ஒளியுணர் மேற்பரப்பு மீது செவ்வனகப் படுகின்றதெனக் கொள்க. (பிளாங் மாறிலி = $6{\cdot}6\times10^{-34}$ J s, ஒளியின் கதி = $3{\cdot}0\times10^{8}$ m s^{-1}, இலத்திரனின் ஏற்றம் = $1{\cdot}6\times10^{-19}$ C, 1 eV = $1{\cdot}6\times10^{-19}$ J)

(i) செக்கனுக்கு ஒளியுணர் மேற்பரப்பு மீது படும் நீல ஒளியின் போட்டன்களின் எண்ணிக்கையைத் துணிக.

(ii) ஒளியுணர் மேற்பரப்பு மீது படும் ஒவ்வொரு 100 போட்டன்களுக்கும் 10 இலத்திரன்கள் வெளியேற்றப்படுமெனின், ஒளியுணர் மேற்பரப்பினால் உண்டாக்கப்படும் ஓட்டத்தைத் துணிக.

(iii) ஒளியுணர் மேற்பரப்பிலிருந்து வெளியேற்றப்பட்ட ஒளிலத்திரன்களின் உயர்ந்தபட்ச இயக்கப்பாட்டுச் சக்தியை (J இல்) கணிக்க.

(f) ஒரு CT அலகிடலி (CT scanner) ஒரு மனித உடலைச் சுற்றி வெவ்வேறு கோணங்களிலிருந்து ஒரு தொடர் X-கதிர் வீம்பங்களை எடுக்கின்றது. ஒரு மருத்துவ ஆய்கூடத்தில் உள்ள CT அலகிடலி ஓர் ஆய்வு நோக்கத்திற்காக முழுநேரமும் தொழிற்படுகின்றது. CT அலகிடலிக்கு அண்மையில் வைக்கப்பட்ட ஒரு TLD ஊட்டுமானி 250 mSv/year என்னும் கதிர்ப்பு ஊட்டைப் பதிவு செய்துள்ளது.

(i) CT அலகிடலியை இயக்குபவரின் அறையில் உள்ள ஒரு கதிர்ப்பு விஞ்ஞானி CT அலகிடலி இயக்கப்படும்போது கிடைக்கும் கதிர்ப்பின் 10% இற்கு வெளிதரப்படலாம். விஞ்ஞானிக்கு வெளிதரப்படத்தக்க உயர்ந்தபட்ச ஊட்டினை mSv/year (mSv/ஆண்டு) இற் கணிக்க.

(ii) கதிர்ப்புப் பணிகளில் ஈடுபடும் ஒரு வேலையாளருக்காக அனுமதிக்கத்தக்க உயர்ந்தபட்ச ஊட்டு 20 mSv/year ஆகும். விஞ்ஞானி ஒரு நாளுக்கு 6 மணித்தியாலங்கள் வீதம் ஓர் ஆண்டில் 146 நாட்களுக்கு வேலை செய்தால், அவருக்கு அனுமதிக்கத்தக்க உயர்ந்தபட்ச ஆண்டு ஊட்டை விஞ்சி அவருக்குக் கதிர்ப்பு கிடைப்பதில்லையென நிறுவுக.

(iii) விஞ்ஞானியின் திணிவு 75 kg எனின், அவருக்கு ஓர் ஆண்டில் எவ்வளவு (J இலான) கதிர்ப்புச் சக்தி வெளிதரப்படும்? [X-கதிர்களுக்கு Sv இல் ஊட்டு = Gy இல் ஊட்டு; 1 Gy = 1 J kg^{-1}]

* * *

(a) அல்பா /α, பீற்றா /β, காமா /γ கதிர்ப்புகள். X கதிர் ..... (02)

(ஏதாவது மூன்றிற்கு ; இரு சரியான விடைகளுக்கு 01 புள்ளி)

(b) ஓர் உயிர்ப்பான ஊட்டுமாணியின் மூலம் நிச்சயமான காலத்தில் வெளி தூண்டலைப் பெறலாம்.

அல்லது

உயிர்ப்புள்ள ஊட்டுமானி நிச்சயமான காலத்தில் உள்ள் கதிரப்பின் மட்டத்தை அளக்கும். ..... (02)

(c)

$$\frac{A}{A_0} = \frac{1}{2^n}$$ ..... (02)

$$\frac{A}{64} = \frac{1}{2^3}$$ ..... (01)

$$A = 8$$ ..... (01)

(சரியான விடைக்கு முழுப் புள்ளி வழங்குக.)

(d) வித்தியாசமான கதிர்ப்பு ஊடுருவும் ஆற்றல் / கதிர்ப்பின் வலு காரணமாக

அல்லது

கதிர்ப்பு உறிஞ்சும் தட்டுக்களின் வகைகளைப் பொறுத்து கதிர்ப்புகளை நிறுத்துவதற்கு / உறிஞ்சுவதற்கு பயன்படுத்த முடியும். ..... (02)

(e)

(i). படும் போட்டோன்களின் எண்ணிக்கை n எனில்

$$\frac{n \times 6.6 \times 10^{-34} \times 3 \times 10^{8}}{400 \times 10^{-9}} = 198 \times 10^{-9}$$ ..... (02)

(L.H.S. இற்கு 01, சமப்படுத்தலுக்கு 01 புள்ளி)

$$n = 4 \times 10^{11} \text{ photons/ seconds}$$ ..... (02)

(ii). ஒரு செக்கனில் வெளியேற்றப்படும் இலத்திரன்களின் எண்ணிக்கை $= \frac{10}{100} \times 4 \times 10^{11}$ .....(01)

(10% எடுப்பதற்காக)

$$n = 4 \times 10^{10} \text{ electrons/ seconds}$$

உண்டாக்கப்பட்ட ஓட்டம் $I = 4 \times 10^{10} \times 1.6 \times 10^{-19}$ .....(01)

(பிரதியீட்டுக்கு)

$$I = 6.4 \times 10^{-9} \text{A}$$ .....(01)

(சரியான விடைக்கு முழுப்புள்ளிகளையும் வழங்குக.)

Downloaded from Past Papers Wiki - Extensive collection of Past papers, Notes and much more!

(iii) $K_{max} = hf - \phi \left(OR\ \frac{hc}{\lambda} - \phi\right)$ ஐ பிரயோகிக்க ..... (01)

$K_{max} = \frac{6.6\times10^{-34}\times3\times10^{8}}{400\times10^{-9}} - 2.0 \times 1.6 \times 10^{-19}$ ..... (02)

(முதற் கூறின் பிரதியீட்டுக்கு 01 புள்ளி ; இரண்டாம் கூறின் பிரதியீட்டுக்கு 01 புள்ளி)

$= 1.75 \times 10^{-19}\ J$ ..... (01)

(f)

(i). உயர்ந்தபட்ச ஊட்டு $= 250 \times \frac{10}{100}$ .....(01)

(10% எடுப்பதற்காக)

$= 25$ mSv/year .....(01)

(ii).

வெளித்தூரல் அதிகரிப்பு $= 25 \times \frac{146}{365} \times \frac{6}{24}$ ..... (03)

($\frac{146}{365}$ பின்னத்திற்கு 01 புள்ளி ; $\frac{6}{24}$ பின்னத்திற்கு 01 புள்ளி ; பெருக்கங்களுக்கு 01 புள்ளி)

$= 2.5$ mSv/year ..... (01)

இந்த பெறுமானம் 20 mSv/வருடத்திலும் குறைவானது ..... (01)

விஞ்ஞானியினால் வெளித்தூரப்படும் கதிர்ப்பு சக்தி

$= 75 \times 2.5 \times 10^{-3}$ (பெருக்கத்துக்கு) .....(01)

$= 0.1875$ J .....(01)

$(1.87 - 1.88) \times 10^{-1}$ J

PAST PAPERS WIKI

(55) WWW.PastPapers.WiKi (55)



2024 A/L Tamil Past Paper Book (Tamil Medium)

රු 850.00

or 3 X රු 283.33 with KOKO



2024 A/L Political Science Past Paper Book (Tamil Medium)

රු 1,200.00

or 3 X රු 400.00 with KOKO



2024 A/L Islamic Past Paper Book (Tamil Medium)

රු 850.00

or 3 X රු 283.33 with KOKO



2024 A/L Islamic Civilization Past Paper Book (Tamil Medium)

රු 850.00

or 3 X රු 283.33 with KOKO



2024 A/L Geography Past Paper Book (Tamil Medium)

රු 1,000.00

or 3 X රු 333.33 with KOKO



2024 A/L Art Past Paper Book (Tamil Medium)

රු 500.00

or 3 X රු 166.67 with KOKO



2024 A/L SFT Past Paper Book (Tamil Medium)

රු 800.00

or 3 X රු 266.67 with KOKO



2024 A/L ICT Past Paper Book (Tamil Medium)

රු 900.00

or 3 X රු 300.00 with KOKO



2024 A/L ET Past Paper Book (Tamil Medium)

රු 850.00

or 3 X රු 283.33 with KOKO



2024 A/L BST Past Paper Book (Tamil Medium)

රු 800.00

or 3 X රු 266.67 with KOKO



2024 A/L Agricultural Science Past Paper Book (Tamil Medium)

රු 1,100.00

or 3 X රු 366.67 with KOKO



2024 A/L Common General Test Past Paper Book (Tamil Medium)

රු 600.00

or 3 X රු 200.00 with KOKO



2024 A/L Business Studies Past Paper Book (Tamil Medium)

රු 850.00

or 3 X රු 283.33 with KOKO



2024 A/L Accounting Past Paper Book (Tamil Medium)

රු 1,000.00

or 3 X රු 333.33 with KOKO



2024 A/L Economics Past Paper Book (Tamil Medium)

රු 900.00

or 3 X රු 300.00 with KOKO



2024 A/L Chemistry Past Paper Book (Tamil Medium)

රු 1,000.00

or 3 X රු 333.33 with KOKO



2024 A/L Biology Past Paper Book (Tamil Medium)

රු 750.00

or 3 X රු 250.00 with KOKO



2024 A/L Physics Past Paper Book(Tamil Medium)

රු 1,050.00

or 3 X රු 350.00 with KOKO

LOL STORE PVT LTD Copyright ©2023